ஜோதிடம்

ஏடு 16, பக் 7

JL

1426167

10799.

*Registered No. M. 2095.*

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JAN 1926
MADRAS

ஓம்

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம், முதலிய
உயர்நல விஷயங்களைப் பரவச்செய்யும் ஓர்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி 16 } 1926-ஞு ஜனவரி-மீ 11உ { பகுதி 7.

பொருளடக்கம்.


1. ராஜமார்க்கம்—*அத்தங்கி சீதாராம சாஸ்திரிகள்* ...177
2. மஹரிஷிசங்கம்—V. *நரசிம்மய்யா* ...184
3. மஹரிஷிகளின் கடிதங்கள் *சு. வி. கனகசபை பிள்ளை* ...192
4. வஸந்தம்மையாரின் கன்வென்ஷன் முடிவுரைப்பிரசங்கம் *மொழிபெயர்த்தோன்.*—B. S. *இராமசுப்பைய்யர்* ...194
5. குறிப்புகளும் சமாசாரங்களும் ...204
6. புஸ்தகவரவு ...209


*சந்தா விபரம்:—*

வருஷ *சந்தா உள்நாடு ரூ* 1—0—0, *வெளிநாடு ரூ* 1—8—0,
*தனிப்பிரதி ரூ* 0—2—0.

*பத்திராதிபர்*—V. இராமச்சந்திர நாயுடு, எனங்குடி.
*தஞ்சாவூர் ஜில்லா.*

போளம் ஸ்ரீ இராமச்சந்திரா அச்சுக்கூடத்தில்
*பதிப்பிக்கப்பட்டது.*

## சந்தா நேயர்களுக்கு அறிவிப்பு.

---

இப்பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் 11உ வெளியாகி, அன்றையத்தினமே தபாலில் அனுப்பவேண்டியநம் நேயர்களுக்கு, நேரில் எணங்குடி தபாலாபீஸில் போடப்படுகின்றபடியால், பத்திரிகை நம் நேயர்களுக்குச்சரிவரச்சேராவிட்டால், அதற்கு நாங்கள் காரணர்களல்லவென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

---

## ஸ்ரீமத் பகவத்கீதை.

---

கிரந்தசுலோகமும் தமிழ் மொழிபெயர்ப்பும். எம்மதச்சார்புமின்றி ஸர்வமத சம்மதமாயும் மூலகிரந்தத்தை அனுசரித்ததாயுமுள்ளது. பிர்ம்மவித்தியா மஹாஸபையின் தலைவரான டாக்டர் அன்னிபெஸண்டு அம்மாள் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பை அனுசரித்து, எணங்குடி ஸ்ரீமான் V. இராமச்சந்திர நாயுடு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. காலிகோ பைண்டுசெய்த பாக்கெட் ஸைஸ் விலை அணா 9. இன்னும் பிரம்மஞானத் தமிழ்புஸ்தகங்கள் வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்திவிலாச புஸ்தகசாலை,

எடமணல், (சீர்காழி வழி).

# ஞானோதயம்.

—(x)—

பிரம்மஞான மாதாந்தரப் பத்திரிகை.

| தொகுதி 16 | 1926-ஹு ஜனவரி-மீ 11வ. | பகுதி 7. |
| --- | --- | --- |

உ

## ராஜமார்க்கம்.

மார்க்கமெனின் வழி. ராஜனெனின், எவ்வித இக்கட்டுக்களுமில்லாமலே நடப்பதற்கு ஹேதுவை உண்டாக்கக் கூடியது. இவ்வித வழிக்கு ராஜமார்க்கமெனப் பெயர்.

ஸ்வஸ்வரூபத்தை விட்டு வஸ்துக்களிடத்தில் தனக்குண்டாகியிருந்த மோஹத்தால் தூண்டப்பட்டவனாகி, அம்மோஹத்தின் மாயையால் தான் நடக்கும் மார்க்கத்திலுள்ள அனேக கிரமங்களைப் பொருட்டாக எண்ணாமலே பிரக்ஞ[illegible] திரிலோகத்தில் சஞ்சரித்துக்கொண்டு

விஷயாண் ஸந்நிக்ருஷ்டே ஸுவிக்ஷ[illegible] விஷயே. விஷயங்கள் தனக்கு அனுகூலங்களாகவிருக்கின் சுகங்களை அனுபவிக்கிறேனென்றும் அவ்விஷயங்கள் அனுகூலமற்றவைகளாய் இன்பொழுது துக்கத்தை யனுபவிக்கிறேனென்றும் பிரம்ம யகண்டந்து ஸ்வஸ்வபாவத்தை மறந்திருப்பான். இவ்விதம் மறந்திருப்பவர்களே நாமெல்லோரும்,

தெய்வானுக்கிரஹத்தால் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் யாவர்மூலமாகவோ ராஜமார்க்க மொன்றிருப்பதாகக் கேள்விப்படுவோம். கேட்டபின்னர், அவ்வித மார்க்கம் யாருக்குத் தெரிந்திருக்கிறது, என விசாரிக்கத் துவக்குவோம். மார்க்கத்தைக் காட்டுபவர்கள் சிலறிருக்கிறார்கள். மார்க்கம் உளது. மார்க்கம் உளதாவென ஆதுரத்தோடு விசாரிப்பவர்கள் தென்படவில்லையே ஒழிய மார்க்கத்தைக் காட்டுபவர்கள் இருக்கிறார்களெனக் கேள்விப் படுகிறோம். பிரக்ஞாணம்சுக்களான நாம் ஸ்வஸ்தானத்தை மறந்து, ஸ்வஸ்வானுபவத்தையும் மறந்து, விஷயாதிகளை இச்சித்து, அவைகளைப் பின்பற்றி ஓடிக்கொண் டிருப்போமன்றோ!. இவ்விதமிருக்க, "ஈஶ்வர꞉ ஸர்வபூதாநாம் ஹ்ருத்தேஶே(அ)ர்ஜுந திஷ்டதி। ப்ராமயந் ஸர்வபூதாநி யந்த்ராரூடாநி மாயயா॥" என்பதாக ஸ்ரீமத் பகவத்கீதையில்சொன்னபிரகாரம், ஸர்வபூதஅந்தராத்மாவும் ஸகலபூதங்களிடத்தும் மறைந்து இருப்பவனும், ஸர்வவியாபியுமான பகவான், தனது அம்சர்களான பிரக்ஞாணம்சுக்கள் தன்னைவிட்டு நீங்கி விஷயமஹா சமுத்திரத்தில் மூழ்கி, ஜீவ விகாசத்திற்காக பலயோனி ஸமூகத்தில் பிறந்தும் இறந்தும் புண்ணிய பிராப்தி பலனை அழியக்கூடிய (மர்திய) ஜன்மத்தையடைந்து, நல்லோர்கள் செல்லும் மார்க்கத்தை விசாரிக்காமல் துக்கியாகி, வைக்கோலைத் தின்றசைபோடும் பசுவைப் போல் கர்மானுபவத்தை யடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவனைப் பார்த்து, "ஹே புத்திஹீனனான பிரக்ஞாணம்சா! என்னைவிட்டு வெகு தூரம் சென்றாய், மீளவும் என் சமீபத்திற்கு வருவதற்கு ஒரு மார்க்கம் உள," வெனத் தெரியப் படுத்துவதற்கு வழிகாட்டுபவர்களை நியமிப்பார்.

ஸ்ரீV. நரஸிம்மய்யா அவர்கள் எழுதிக் கொண்டுவரும் மஹரிஷிசங்க மென்ற வியாசத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள ரிஷிகளெல்லோரும் மார்க்கத்தைக் காட்டுபவர்களே. அவர்களுக்கே குருக்கள் எனப் பெயர்.

குருக்கள் மூவகைத்தாரென பிரம்மவித்யோபநிஷத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. "சோதகோ போதகஶ்சைவ மோக்ஷதஶ்ச குரு꞉ ஸ்ம்ருத꞉" அதாவது, சோதககுருவெனவும், போதககுருவெனவும், மோக்ஷதர்களெனவும் குருமார்கள் மூவகைத்தார். இம்மூன்று குருமார்களும் ராஜமார்க்கத்தை ஆசிரயித்திருப்பார்கள். "தபோபி꞉ க்ஷீணபாபாநாம் ஶாந்தாநாம் வீதராகிணாம்" என்ற பிரகாரம், நித்யானுஷ்டானம் முதலான கர்மங்களை ஆசிரயித்து, அவ்விதமாய் தபஸைச் செய்து பாபங்களை க்ஷீணிக்கச் செய்துகொண்டு பலிதார்த்தமான சாந்தியையடைந்து, ராகத்வேஷாதிகளைக் கொஞ்சமட்டில்போக்கடித்துக்கொண்டவர்கள் ராஜமார்க்கத்தைக்குறித்து விசாரிக்கும்பொழுது, அவர்களுக்கு மார்க்கமிருக்கின்றதென்பதாக தெரியப்படுத்தும் குருமார்கள் ["சோதகோ போதகஶ்சைவ மார்க்கம்" என மார்க்கத்தைக் காட்டுபவர்] சோதக குருமார்கள். அவர்கள் மார்க்கத்தையும் காட்டி, போதககுருமார்களையும்கூடக் காட்டுவார்கள். போதககுரு சிஷ்யனைப் பரீக்ஷித்து ஞானோபதேசம் செய்வார்.

சிஷ்யர்களைப் பரீக்ஷித்தல் ஞானதாதாக்களுடைய சம்பிரதாயம். பிரச்னோபநிஷத்தில் இந்த சம்பிரதாயம் சூசிப்பிக்கப் பட்டிருக்கிறது. சுகேசன் முதலா யுள்ளவர்கள் ஞானயோகத்தில் ஆசக்தியுடையவர்களாகி, "பரம் ப்ரஹ்மாந்வேஷமாணா꞉" பிப்பலாத ரிஷியை ஆசிரயித்தார்களென்பதாகவும் அபிப்பலாதர் பார்த்து நீங்களெல்லோரும் இது வரைக்கும் செய்த தவங்களன்றி இன்னும் தவம், பிர்ம்மசரியம், சிரத்தை முதலியவைகளை அனுஷ்டித்துக்கொண்டு ஒரு வருஷகாலம் எனது ஆசிரமத்தில் இருக்க வேண்டுமென்பதாக ஆக்ஞாபித்தார், என்றும் கூறப்பட்டிருக்கிறது. சிஷ்யனை பரீக்ஷை செய்தாலொழிய பிர்ம்மவித்தையை உபதேசிப்பதில்லை.

ஸ்ரீமத் பகவத்கீதையில் செய்யப்போகும் ஞானோபதேசத்திற்குப் பூர்வம் "ஸஞ்ஜய உவாச த்ருஷ்ட்வா து பாண்டவாநீகம்" முதல் "ஏவமுக்த்வார்ஜுந꞉ ஸங்க்யே ரதோபஸ்த உபாவிஶத்।" என்ற சுலோகம் முதல் அத்யாயத்தின் கருத்தைக் காட்டும்.

2-10799



அந்த ச்லோகத்தின் அர்த்தமென்னவெனின்:—பாபம் செய்ய[illegible]யப்படுகிறவனும், துராசையில்லாதவனும் பிர்ம்ம நிஷ்டைக்குத் தகுந்தவனன்று! அர்ச்சுனன் அவ்விதமாகவே யிருக்கிறான். ஆனதுபற்றியே கௌரவர்களைக் கொல்லுதலென்ற பாபத்தைச் செய்யாது பயப்பட்டான். அதனால் சம்பாதிப்பதற்கு சாத்தியமாயுள்ள ராச்சிய போகங்களிடத்து அபேக்ஷையை விட்டொழித்தான். என இவ்விதம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ஊஹித்து ராஜாக்களுக்குத் தகுந்த பிர்ம்மவித்தையை உடனே உபதேசித்தாரென முதலத்தியாயத்தில் சூசிப்பிக்கப்பட்டது.

பரீக்ஷாகாலத்தில் சிஷ்யனுடைய சீலத்தைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய அளவு போதக குரு புத்திமதிகள் சொல்லுவது சம்பிரதாயமே. இவ்வித சம்பிரதாயத்தையனுசரித்தே "குரு சிஷ்யர்கள் ஒன்றே அல்லவா" என சத்குருபாதங்களில் என்ற கிரந்தத்தின் சூத்திரத்திற்கு ஸ்ரீமான் யோகி லெட்பீட்டரவர்கள் எழுதிய வியாக்கியானத்தைக் குறித்து நான் எழுதிய "சத்குரு பாதங்களின் வியாக்கியானம்" என்னும் வியாசத்தில் பிரஸ்தாபித்திருந்தேன்.

இவ்விஷயத்தைக் குறித்து, மஹாத்மா தேவாபி அவர்கள் அவரது சிஷ்யர்களுக் குபதேசித்த சில விஷயங்கள் ஸ்ரீ லெட்பீட்டரவர்கள் அப்பால் எழுதிய கிரந்தத்தினின்று பின்வருமாறு எழுதப்படுகின்றன:—

## ஸ்ரீ குருதேவருடைய வசனம்.

சிஷ்யர்களே! நீங்கள் எல்லோரும் உங்களை நீங்கள் மறந்து இதரர்களுக்காக தெய்வங்களாக ஜீவிக்கவேண்டும். மேலும் உங்களுக்கு நான் எந்த வேலையைச் சொன்னாலும் சிரத்தையோடு செய்தல் வேண்டும்.

உங்களது முக்கிய உத்தேசம் மஹாபீடத்திற்கு ஸேவை செய்வதற்கே ஜீவித்திருக்கவேண்டுமென்றல்லவா? அது எனக்கு நன்றாய்த் தெரியும். ராஜமார்க்கத்தில் அனேக பூமி



கள் (படிகள்) இருக்கின்றனவென்று உங்களுக்குத் தெரியுமன்றோ! அப்பூமிகளில் செல்லவேண்டுமாயின், பிரமாத உறுதியோடு பிரயத்தினப்பட்டாலொழிய சாத்தியமன்று. உலகசேவை செய்யவேண்டுமென்று அதற்கு சித்தமாக இருந்தால் மாத்திரம் போதாது. சேவை செய்வதற்கு எப்பொழுது சந்தர்ப்பம் கிடைக்குமென்று, ஜாகரூகத்துடன் நிரீக்ஷித்துக் கொண்டிருந்து, சந்தர்ப்பங்கள் கிடைக்காத மாத்திரத்தில் சந்தர்ப்பங்களை உண்டாக்கிக்கொள்ள வேண்டும். முதல் முதல் சுவல்ப ஸஹாயங்களைச் செய்வதற்குக் கற்றுக்கொள்ளின் காலக்கிரமத்தில், பெரிய சகாயங்களைச் செய்வதற்குப் பழக்கமுண்டாகும். ஒரு நிமிஷ காலமாவது குரு சிஷ்ய சம்பந்தத்தை மறவாதே. குருதேவரின் ஞாபகம் உலக வார்த்தைக்கு இடந்தரா. விஷய எண்ணங்கள் என்ற சமுத்திரத்தின் அலைகள் சிஷ்யனைச்சூற்றிலும் அடித்துக்கொண்டிருக்கும். குரு தேவருடைய ஞாபகமிருக்கின் அந்த எண்ணங்களால் உண்டாகக்கூடிய கெடுதியை நிரோதிக்கலாம். அது மாத்திரமன்று. ராஜமார்க்கத்தில் விசேஷ அபிவிருத்திக்குக்கூட மிக்க பலமுள்ளதாகும். ராஜ மார்க்கத்தில் நடக்கவேண்டுமென பிரயத்தனப் பட்டவர்களை பிரயோஜனமற்ற விஷய எண்ணங்கள் அவைகளின் ஆபாசம் இவைகள் பாதிப்பதற்கு இடமிராது. அந்த எண்ணங்களின் ஸ்வபாவம் தெரிந்திருக்குமேயானால் பிரவிர்த்தி மார்க்கத்தில் மூழ்கி யிருப்பவர்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை நாம் ஞாபகத்திற்குக் கொண்டுவரக் கூடிய சக்தி நமக்குண்டாகும். அதன்பேரில் அவர்களுக்குத் தகுந்த சகாயம் செய்யக்கூடும். அனுதாபத்தை அப்பியாசஞ் செய்யக்கூடும். சிஷ்யர்களே! நீங்கள் இன்னமும் ஜீவன் முக்தர்கள் அனுபவிக்கும் இணையில்லாத ஆனந்தத்தை அனுபவிப்பதற்குச் சாத்தியமாகவில்லை. மேலும் சூரியகாந்தியோடு சமானமான ஜீவன்முக்தி சங்கத்தின் அனுக்கிரகத்தை ஸம்சாரமென்ற இருளில் இருப்பவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் சக்தியுள்ளவர்களா யிருக்கிறீர்கள். ஜீவன் முக்தர்கள் பெரிய

சூரியர்களானால் உங்கள் யோக்கியதைக்குத் தக்கவாறு நீங்களும் அனுக்கிரஹிப்பதற்காகச் சின்ன சின்ன சூரியர்களாக ஏற்படல் வேண்டும். உலகோர் அவர்கள் செய்யும் அனுக்கிரஹத்தைத் தெரிந்துகொள்ள வில்லை. ஆமோதிக்கவில்லை. ஆனாலென்ன? நீங்கள் அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுக்குச் சகாயம் செய்யவேண்டுவது உங்கள் தர்மம்.

உங்கள் பிரயத்தனத்தை எம்மாத்திரமேனும் குறைக்கப்படாது. ஏறவேண்டிய மலைகள் உங்களுக்கு முன்னாலிருக்கின்றன. உங்களில் அனுதாபம், சிநேகம், பொறுமை என்ற குணங்களை வளர்த்துக் கொண்டிருக்க வேண்டும். இதராளுடைய அபிப்பிராயங்கள் கூட உங்கள் அபிப்பிராயங்களைப் போலொத்தவைகளே யென்று அறிந்து, அவர்களுடைய அபிப்பிராயங்களைப் பொறுமையுடன் கற்றுக்கொள்ள வேண்டும். பேச்சுக்களில் கடினம் ஆபாசம் எப்பொழுதுமிருக்கப்படாது. வாக்குவாதம் செய்வதில் ஆசையைக் கட்டோடேவிட்டொழித்தல் வேண்டும். வாதத்திலாசையுள்ளவர்கள் அதிக ஜாகரூகத்துடன் வாதிக்கும் ஸ்வபாவத்தை தலையெடுக்காமல் அழுத்திவிட வேண்டும். மிதமாகப் பேசவேண்டும். மிதவார்த்தை கூட ஹிதமுள்ளதா யிருக்கவேண்டும். சொகுசாய்ப் பேசவேண்டும். நீங்கள் சொல்லப்போகும் வார்த்தைகள் யுக்தியோடு கூடினவைகளா, தயையோடு கூடினவைகளா, வென்பதை முன்னதாக ஆலோசித்துப் பார்க்காமலே வசனிக்கப்படாது. ஸர்வபூத ஹிதத்தை அந்தரங்கத்தில் வளர்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு, ராஜமார்க்கத்தில் கஷ்டங்கள் வரா. ஸர்வபூதஹிதம் மிகவும் பெரிய சத்குணம். அதன்றிச் செய்யும் இதர காரியங்கள் சாம்பலில் செய்யும் ஹோமங்களே.

ராஜமார்க்கத்தில் பிரயாணத்திற்கு அனுகூலங்களை ஒழிய எண்ணங்களை அதிஜாகரூகத்துடன் விலகச்செய்ய வேண்டும். அடிக்கடி விரட்டி யோட்டி யோட்டி மீளவும்அவ்வெண்ணங்கள் நம்மை ஆசிரயிப்பதற்கு அசாத்தியமாகும்படி செய்தல் வேண்டும். கோபத்தை உண்டாக்கக்கூடிய அம்



மாணய உங்களிடம் ஜனிக்குமேயானால் அம் மாயாசலனங்கள் ஜீவன் முக்தர்களுடைய சங்கத்தின் சாந்தத்தை பாதிக்கும். ஆனதுபற்றி கூடாது. கர்வத்தை வேருடன் களைந்து தூரத்தில் விட்டெறிய வேண்டும். கர்வம் புரோவிர்த்திக்குக் கேடானது. இதரர்களுக்கு எம்மாத்திரமேனும் அபராதம் உண்டாக்குவித்தலுக்கு சாத்தியமாகா வண்ணம் வார்த்தைகளாட வேண்டும். காரியங்கள் செய்வதில்கூட நிரபராத காரமாயுள்ள சாகசக்கியங்கள் ஏற்படல் வேண்டும். இது கஷ்டமே. ஆனாலும் இது ராஜமார்க்கத்தில் நடப்பவர்களுக்கு முக்கிய குணம்.

உலகசேவையை நிஷ்கரிஷையாக ஆரம்பிக்கவேண்டும். ஏதோ செய்தமட்டில் போதாதாவென உபேக்ஷை செய்யப்படாது. எவ்விதமான வுலகசேவையில் உனக்கு இஷ்டமிருக்கின்றதோ அது அன்றுமுக்கியம். உலகோருக்கு எவ்விதமான உதவி அவசியமோ, எவ்விதசேவை ஸஹாயகாரியோ அவ்விதசேவையைச் செய்யவேண்டும். ராஜமார்க்கத்தில் நடக்கும் அப்பியாசி எப்பொழுதும், தயையையும், உதவியையும், உதவிசெய்வதற்கு வேண்டிய அட்க்கத்தையும் அப்பியசித்துக் கொண்டிருக்கவேண்டும். உலகசேவை செய்யாமல் மறந்தகாலமெல்லாம் விருதாவாய்ப் போக்கடித்ததாகவே கருத்து.

உங்களிடம் ஸாதகனுக்கு இருக்கவேண்டிய குணங்களுக்கு விரோதமாயுள்ள துர்குணங்களிருக்குமாகின் திடமுயற்சியால் அந்த லோபங்களை வேரறச்செய்யவேண்டும். இவ்வித பிரயத்தனத்தில் உங்களுக்கு என்சகாயம் இருக்கின்றதென்பதாக மஹாத்மாதேவாபி வாக்களித்தார்.

ராஜமார்க்கயாத்திரையில் அநேக கஷ்டங்களிருக்கின்றன. இடையூறுகள் எல்லாவற்றையும் ஜயித்தலுக்கு ஸஹாயகாரி திருடதரமான குருபக்தியே ஆனதுபற்றி "ஸந்தகஸெ வஹ்ம் ஶ்ரோளஹகாரா" என்றபிரகாரம் குருபக்தியை திடப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பக்தியெனும் பதத்திற்கு ஸாதகன் அனுஷ்டிக்கும் மார்க்கத்தை யனுசரித்து அர்த்தம் மாறிக்கொண்டிருக்கும். ராஜமார்க்கத்தில் நடப்பவன் அப்பியசிக்க வேண்டிய பக்தி இதரமார்க்கங்களில் இருக்கவேண்டிய பக்தியைவிட கஷ்டமானது. கீதா சாஸ்திரத்தில் "[illegible]" என்சொல்லப்பட்டிருக்கிறது. ராஜமார்க்கபக்தி எவ்விதமெனின், "[illegible]........[illegible] ||" ராஜமார்க்கத்தில் விக்கினங்கள் விசேஷமிருக்கும். இருந்தாலும் இந்த விக்கினங்கள் எல்லாவற்றையும் தலையெடாதடக்கி நான் மேற்கொண்ட வேலையைச் செய்தே தீர்வேன் என்ற உற்சாகம் பலமாய் இருக்கும் பக்தியைச் சாதகன் அப்பியசிக்கவேண்டும்.

ஹரி: ஓம்। க்ருஷ்ணார்ப்பணமஸ்து ॥

அத்தங்கி சீதாராமசாஸ்திரிகள்

தெலுங்கு திவ்யஞானதீபிகையினின்று பத்திராதிபரால் மொழிபெயர்க்கப்பட்டது.

---

# மகரிஷிசங்கம்.

## கௌதம புத்தர்.

:0:

(161-ம் பக்கத்தொடர்ச்சி.)

---

சுமார் 2500 வருஷங்களுக்கு முன்னர் இமயமலையின் தென்பாகத்திலுள்ள நேபாளதேசத்தை சாக்கியவம்சஸ்தரான சுத்தோதன மஹாராஜா பரிபாலித்துவந்தார். அப்பொழுது அந்த தேசத்திற்கு ராஜதானி கபிலவஸ்துவெனும் பட்டணம். அந்தராஜாவின் தர்மபத்தினியின் பெயர் மாயாதேவி. அகண்டைச்வரிய ஸம்பன்னர்களும் பரமதார்மிஷ்டர்களாயு



முள்ள அந்த ராஜதம்பதிகளுக்கு வெகுகாலம் சந்தானமில்லாமல்இருந்து, பின்னர் அவர்களது புண்ணிய பரிபாகத்தால், கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் 557 ம் ஆண்டில் வியாஸ மஹரிஷி, அவர்களுக்குப் புத்திரனாக அவதரித்தார். ஜனன காலத்தில் மூன்று உலகங்களும் சாந்தியால் நிறைந்ததாயின. சுவர்க்கலோகத்தில் ஜயஜயத்தொனிகள் கோஷித்தன. தேவர்கள் புஷ்பமாரிபொழிந்தார்கள். அக்குழந்தைக்குச் சித்தார்த்தனெனப் பெயரிட்டார்கள். அக்காலகிரஹ நிலையைச் சோதித்து திவ்யஞானிகள் இச்சிசு ஸமஸ்த பூமண்டலத்திற்கும் ஏகசக்ராதிபதியாகிப் பரிபாலிப்பதைவிட ஆத்மதத்வ ஞானியாகி ஜகதாசாரியப்பிரபுவாகி இந்த ஜகத்தில் அபார கீர்த்தி அடைதல் நிச்சயமென்பதாகச் சொன்னார்கள்.

அவர் ஜகத்குரு பதவியை அடைவதில் தகப்பனுக்கு எம்மாத்திரமும் இஷ்டமேயில்லை. தன்குமாரன் பூலோக சக்கரவர்த்தி ஆகவேண்டுமென்ற அவாவே அவருடைய மனதில் திடமாய் ஊன்றிற்று. வெகுகாலம் குழந்தை இல்லாமலிருந்து அக்குழந்தை பிறந்தமையால் தாய் தகப்பன்மார்கள் மிக்க ஆதரணையோடு அதை வளர்த்தார்கள். ஸகல வித்தைகளையும் கற்றுக்கொடுத்தார்கள். பிள்ளையின் மனதில் எவ்வித சங்கடமும் படாதிருக்கும்படி, வேண்டிய போக்கிய பதார்த்தங்களை யெல்லாம் அபரிமிதமாகச் சேகரித்து மிக்க ஆதரவோடு போஷித்தார்கள். சுகப்பிரதமான ஆடல்கள், பாடல்கள், வேடிக்கைகள், விநோதங்கள், ஸரஸங்கள் முதலியவைகளை ராஜகுமாரனைச் சுற்றிலும் நிறைத்தார்கள். ஆயினும் இந்த சுகங்கள் கிஞ்சிற்றேனும் சித்தார்த்தனது மனதிற்கு ருசியுடையவைகளன்று. அவர் பால்யத்தினின்று சாந்தஸ்வபாவரும் தயாளுவும் ஏகாந்தப் பிரியரும் மனனசீலமுடையவருமாயிருந்தார். எல்லோரிடத்தும் பிரேமையுடையவராகிப் பசுபட்சியாதிகளிடத்தும்கூட தயையுடையவராகியிருந்தார். எப்பொழுதேனும் கடுமையாக வார்த்தையாடமாட்டார். எவர் மனதையும் நோகச் செய்யார். உலகிலுள்ள கஷ்டங்களையும் துக்கங்களையும்

பார்க்கின் குமாரனுடைய மனோ சந்தோஷத்திற்குப் பங்கமேற்படுமென்ற சங்கையோடு தாய்தந்தையர் அவரை ராஜ கிரஹத்தை விட்டுத்தாண்டி வெளியில் செல்லவிடாமல் அதி ஜாகரூகத்தோடு பார்த்துக்கொண்டு வந்தார்கள். துக்ககரமாயுள்ளதும் சித்த சாந்திக்குப் பங்கமாயுள்ளதுமான வார்த்தையெதுவும் அவரது செவிகளில் விழாமல் இருக்கத் திட்டஞ் செய்தார்கள். பரிபூரண யௌவன ஸம்பன்னரானவுடன், அவருக்கு வயோ ரூப லாவண்யத்தில் அநுகுணமாயுள்ள ஒரு ராஜ கன்னியா ரத்தினத்தைக் கொண்டுவந்து விவாஹம் செய்வித்தார்கள். அந்த அம்மாள் பெயர் யசோதரா. இவ்விதம் சகல சுகங்களும் நிறைந்திருந்த இந்த ராஜகுமாரனுக்கு ஸ்வய துக்கமெதுவும் இல்லாதிருப்பது உண்மையன்றோ! உலகில் துக்கங்களும் கஷ்டங்களும் இருக்கின்றனவென்ற விஷயமே அவரறியவில்லை. தரித்திர கஷ்டங்கள், வியாதி உபாதைகள், ஜராதுக்கங்கள், மரணசோகங்கள் உலகில் நிறைந்திருக்கின்றனவல்லவா? சித்தார்த்தனுக்கு அவைகள் எதுவும் தெரியமாட்டாது. ஒரு ஏழையையாவது, வியாதியால் பீடிக்கப் பட்டவனையாவது, கிழவனையாவது, பிணத்தையாவது அவர் எப்பொழுதேனும் கண்களால் பார்த்தவரன்று; காதுகளால் கேட்டவருமன்று. மானிட ஜீவியம் கேவலம் சுகமென அவர் நம்பியிருந்தார். கொஞ்ச காலமாகவே, அவர் பால்ய நிர்ப்பந்தங்களைக் கடந்து ஸ்வேச்சா விஹாரமுடையவரானார்.

இவ்விதமிருக்க, ஒருநாள் சித்தார்த்தர் உலாவுதற்காக ரதமேறிக் கோட்டைவாசல் கடந்து வெளியில் சவாரி புறப்பட்டார். அச்சமயம் தெய்வ தந்திரத்தால் வழிப்பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ஒரு பிச்சைக்காரன் ராஜ குமாரனைப் பார்த்து உறக்கக் கூப்பிட்டு யாசித்தான். ராஜ குமாரன் திக்பிரமை யடைந்து ஸாரதியைப் பார்த்து, "அவன் யார்" என்று கேட்க, "சாரதி அவன்பசியால் வருந்திக்கொண்டிருக்கிறான். அன்னத்திற்கு விதியற்றவன்," என்று சொன்னான். அப்பிச்சைக்காரனுக்கு ஒரு ரூபாய் கையில் வைத்து



சித்தார்த்தன் சென்றான். கொஞ்சதூரம் செல்லவே ஒரு குஷ்டரோகி உடம்பெல்லாம் ரணங்களால் நிறைந்து பார்ப்பதற்குப் பரம அசங்கியமாக விருந்தவன் மார்க்கத்தில் அவர் திருஷ்டியில் பட்டான். அவர் பரம ஆச்சரியத்தோடு "இவன் யாவன்" எனக் கேட்கவே, சாரதி "இவனுக்குக் குஷ்டவியாதி, உலகிலுள்ள சகல வியாதிகளையும் விட இது அதிக கோரமுள்ளது" என்று சொன்னான். திரும்பவும் கொஞ்சதூரத்திற்கப்பால் நூறு வயது கிழவனொருவன், உடலெல்லாம் ஜீர்ணித்து தலையாட்டிக்கொண்டு நடக்கமுடியாமல் ஊன்றுகோல் பிடித்துக்கொண்டு சென்று கொண்டிருந்தான். அதைப்பார்த்து, வியாகூலமடைந்த ராஜபுத்திரனுக்கு அவ்வளவு காலம் ஜீவித்திருக்கின், பிரதி மனிதனுக்கும் அவ்வித அவஸ்தை பிராப்திக்குமென சாரதி எடுத்துச்சொல்லி விட்டுச் சென்று கொண்டிருக்கையில், ஸ்மசானத்திற்கு எடுத்துப்போய்க் கொண்டிருந்த ஒரு பிணம் எதிரில் வந்தது. அத்துடன்கூட சில ஸ்திரீபுருஷர்கள் ஓப்பாரியிட்டு அழுதுகொண்டு நடந்து கொண்டிருந்தார்கள். பந்துமித்திரர் அநேகர் கும்பல்கூடி வியசன பீடிதர்களாகிப் போய்க் கொண்டிருந்தார்கள். இது என்ன வென்பதாக ராஜபுத்திரன் கேட்கவே, அதனுடைய விவரத்தை யெல்லாம் சாரதியெடுத்துச்சொன்னான். அத்துடன் அவர், தனக்கு மிக்க சுககரமாயிருந்த இந்தவுலகில் இவ்வளவு கஷ்டங்களிருத்தலுக்கு என்ன காரணமெனத் தர்க்கித்துக் கொண்டிருக்கையில், ஒரு மஹான், கேவலம் சாந்தமூர்த்தி, நேத்திரங்களினின்று ஆன்ம தேஜஸை வெளியில் விதைத்துக்கொண்டிருந்தவர், ஸர்வஸங்கப்பரித்தியாகியாகி, ஆத்மாவில் ரமித்துக்கொண்டிருந்த புருஷர், மார்க்கத்தில் தென்பட்டார். இவையெல்லாம் பார்த்து சித்தார்த்தர் கிரஹத்திற்கு மீளவும் சென்றார்.

அதுமுதல் அவர் விசார பீடிதரானார். மானிடகோடியநுபவிக்கும் நானாவித துக்கங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்திக்கும் உபாயமென்ன வென்பதாக அவர் நிரந்தரம் சிந்தித்துக் கொண்டிருந்தார். இவ்விதமிருக்க, ஒருநாள்

எவரோ ஒரு புருஷர்வந்து, "நீ உலகை உத்தரிப்பதற்காக ஜனித்தவன், சன்னியாசியாகி தேச சஞ்சாரம் செய்யக்கடவாய்" எனச்சொன்னது போல் அவருக்குச் சொற்பனம் உண்டாயிற்று. அவ்விதமே செய்வேனென அவர் சங்கற்பித்து, அர்த்தராத்திரி வேளையில் எவரோடும் சொல்லாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போக வேண்டுமென நிச்சயித்துக்கொண்டார். எந்த நாள் இரவு அவர் பிரயாணம் வைத்துக்கொண்டிருந்தாரோ அந்த நாள் பகலில் அவருக்குப் புத்திரன் ஜனித்திருக்கிறானென்ற சுபவார்த்தை அந்தப்புர மந்திரி வந்து சொன்னார். இப்பொழுதுள்ள பந்தமல்லாமல் மற்றொரு பந்தம் ஏற்பட்டது; ஆகட்டும் பிள்ளைக்கு ராகுலா என்ற பெயரிடுங்களென சித்தார்த்தன் பதிலுத்தரமளித்தான். அப்பால், அந்த தினம் நடுநிசையில் அவர் படுக்கை உள்ளுக்குச்சென்று, காடாந்த நித்திரையில் இருந்த தனதுபிரிய ஸதியையும் அந்த அம்மாள் பக்கமிருந்த சின்னக் குழந்தையையும் பார்த்து அவர்களை ஆசீர்வதித்து பிரிவு துக்கம் மென்மேல் பொங்கிப் பொங்கிவர, அவற்றை யடக்கிக்கொண்டு சப்தம் பண்ணாமல் புறப்பட்டுப்போய் அந்தப்புறத்தைக் கடந்தபின்னர், குதிரையிலேறி பட்டணத்திலிருந்து வெகுதூரம் சென்று, அங்கு குதிரையையும் குதிரைக்காரனையும் ஆசீர்வதித்துத் திருப்பிவிட்டார்.

அப்பால் தான் தரித்திருந்த ராஜாங்க வஸ்திராபரணங்களை நீக்கி, சிகையக்ஞோப வீதங்களை ஒழித்து காஷாய வஸ்திரத்தைத் தரித்தவராகி, ஏகாங்கியாகி, பாதசாரியாகி, ஆரண்யமார்க்கத்தைப் பிடித்துச்சென்றார். அங்கு சில சன்னியாசிகள் கூடிக்கொண்டு, அவருடன்கூட தேசசஞ்சாரம் செய்துகொண்டு மானிடகோடிக்கு நிச்சயமான சுகம் எவ்விதம் உண்டாகுமென்ற ஏக விசாரத்தோடு உபவாஸங்கள் செய்துகொண்டு, ஊண் உறக்கம் முதலியவைகளைக் குறைத்து கடுமையான தவத்தைச் செய்துக்கொண்டு, ஆறுவருஷங்கள் கழித்தார். நாளுக்குநாள் சரீரம் மெலிந்தது. நிதானமாய் சஞ்சாரம் செய்வதற்கான சக்தியற்றவரானார். சங்கற்பமாத்



திரம் நிறைவேறினதாக இல்லை. அப்பால் உடம்பைக் கஷ்டப் படுத்துவதால் பிரயோஜன மில்லையென்பதாக ஸ்வானுபவத்தால் தெரிந்துகொண்டு, ஆரண்யத்தைவிட்டு நான்கு சிஷ்யர்களுடன் இப்பொழுது புத்தகயா வென்னும் பெயரால் விளங்கிவரும் புண்ணிய க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கொரு வடவிருக்ஷத்தின் கீழ் தர்ப்பாசனத்தில் உட்கார்ந்து ஞானோதயமாகுமளவும் இங்கிருந்து எழுந்திருக்க வேண்டுமென திடசங்கற்பம் செய்துகொண்டு ஸமாதியைக் கைக்கொண்டார்.

அப்பொழுது வெகு விக்கினங்கள் சம்பவித்தன. அவைகள் எல்லாவற்றையும் ஜயித்து வைசாகசுத்த பௌர்ணமி தினம், சித்தார்த்தஸ்வாமி ஸர்வக்ஞராகி, பரிபூரணராகி, புத்த பதவியையடைந்து, சமாதியினின்று எழுந்தார்.

புத்த பதவியெனின் ஞானபூமிகளில் பரம உத்கிருஷ்டமான பதவி. குடீசகம், பஹூதகம், ஹம்ஸம், பரமஹம்ஸம் என்ற நான்கு ஞான தீக்ஷைகளை யடைந்த பின்னர், அதிலிருந்து வேறொரு படியேறி, ஐந்தாம் தீக்ஷைகளை யடைந்தவர்கள் ஜீவன் முக்தர்கள். ஜீவன் முக்தி பதவியினின்று 2 படிகள் மேல்சென்று 7-வது தீக்ஷையை யடைந்த மஹான்கள், மனுபீடத்தையும் ஜகத்குரு பீடத்தையும் வஹிக்கும் அதிகாரிகள். அதற்கு மேல்படி புத்தபதவி. இது எட்டாம் தீக்ஷை.

இப்பூமண்டலத்தில் விகாசத்தை யடைந்து கொண்டிருக்கும் மானிடகோடிகளில் இப்பொழுது புத்த பதவியை அதிஷ்டித்த மஹாபுருஷர் சித்தார்த்தர் ஒருவரே. பூர்வயுகங்களில் ஜகத்குரு பீடாதிபதிகளா யிருந்த மஹா புருஷர்கள் மூவர், காலக்கிரமத்தில் ஒருவர் பின்னொருவர் புத்தபதவியை யடைந்து, ஊர்த்துவ லோகத்திற்குச் சென்றார்கள். அவர்கள் கோளாந்தரத்தினின்று வந்தவர்களே யொழிய இப்பூமண்டல மானிடகோடிகளில் சேர்ந்தவர்களன்று.

இவ்விதம் புத்தபதவியை யடைந்தபின்னர், ஸித்தார்த்தர் கௌதம புத்தரென்ற பட்டத்தோடு அனேக வருடங்கள் தேசசஞ்சாரம் செய்து, அனேகம் சிஷ்யர்களை அடையப்பெற்று, ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு, ஸ்திரீ புருஷர்களுக்கு, தர்மோபதேசங்களைச் செய்வித்தார். பூர்வாசிரமத்தில் அவரது பாரியையான யசோதர ராணியும் அவரது தாய் தகப்பன்மார்களும் புத்திரனும் அவருக்கு சிஷ்யர்களாகி தன்யர்களானார்கள்.

அவருபதேசித்த தர்மங்களில் ஸர்வபூத தயையும் அஹிம்சையும் பிரதானமானவைகள். யக்ஞ யாகங்களில் பசு ஹிம்சை செய்தல் தர்ம விருத்தமென்பதாக அவர் போதித்தார். அவர் காலத்திலேயே பசு யக்ஞங்கள் வேண்டிய அளவு குறைந்தன.

இவ்விதம் கௌதம புத்தர் தர்மோபதேசத்தைச் செய்துகொண்டு, 45 வருடங்கள் கழித்து, அப்பால் ஜகத்குரு பீடத்திற்கு மைத்திரேய மஹரிஷிக்குப் பட்டம்கட்டி 80 வயதில் வைசாக சுத்த பௌர்ணமி தினத்தில், குசிநகர பிராந்தியத்தில் ஹிரண்யவதி நதிதீரத்தில் தனது சிஷ்யவர்க்கத்தால் புடைசூழப்பட்டவராகி, ஸமாதியிலிருந்து சரீரத்தை விட்டொழித்து, மஹாபர நிர்வாண பதவியையடைந்தார்.

கௌதம புத்தர் அவதார சரித்திரத்தில் நான்கு முக்கிய விருத்தாந்தங்கள் வைசாக சுத்த பௌர்ணமி தினத்தில் சம்பவித்தன:—(1) ஸித்தார்த்தருடைய ஜனனம், (2) அவர் ஸர்வ ஸங்கப் பரித்தியாகம் செய்து வீட்டை விட்டு வெளிச்செல்லுதல், (3) அவர் புத்த பதவியையடைதல், (4) புத்ததேவருடைய நிர்யாணம். ஆனதுபற்றியே அந்த தினம் ஹிந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் மிகவும் புண்ணிய தினம். அது வியாஸபௌர்ணமியென ஹிந்துக்களும் புத்தர் புண்ணிய திவஸமென பௌத்தர்களும் பக்தி சிரத்தையோடு அம்மஹா புருஷனைப் பூஜிப்பார்கள்.



ஜகத்குரு புத்த பதவியை அதிஷ்டித்து இச்சரீரத்தை விட்டுச்சென்று போனபின்னர், அவர் பூலோகத்தில் மீளவும் அவதரிப்பதில்லை. பூலோகானுபந்தத்தையே அவர் விட்டொழித்து விட்டு, ஊர்த்துவ லோகத்திலிருந்தே ஸர்வ பூத ஹிதத்தை ஆசரித்துக் கொண்டிருப்பார். பூர்வபுத்தர்கள் அவ்விதம் செய்தவர்கள். கௌதமபுத்தரும் இனி மீளவும் பூலோகத்தில் அவதரியார். ஆனாலும் அவருக்கு மானிட கோடிகளிடத்துள்ள பிரேமாதிசயங்களால் பூலோகத்தோடு கொஞ்சம் சம்பந்தத்தை வஹித்திருக்கிறார். எப்பொழுதேனும் தக்க சமயத்தில் பிரகிருத ஜகத்குருவானவர் தியானித்த மாத்திரத்தில் அவர் பிரத்யக்ஷமாகி உலகத்தை அனுக்கிரஹிப்பார். இதுவுமன்றி, பிரதி வருடம் வைசாக சுத்த பௌர்ணமி தினத்தில் ஹிமவத் பர்வதத்தின் வடக்கு பாகத்தில் ஒரு அற்புதமான உத்ஸவம் நிகழும். உலகத்திலுள்ள ரிஷிகளெல்லோரும் அங்கு வந்து கூடுவார்கள். மஹரிஷிகளுடைய சிஷ்யர்களாகி ஞானதீக்ஷையை யடைந்தவர்களெல்லோரும் சூட்சும சரீரங்களோடு அங்கு வந்து சேர்வார்கள். இதுவுமன்றி சுற்றுப்பக்க கிராமங்களினின்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஸ்திரீகளும்புருஷர்களும், மஹாத்மாக்களின் அனுக்கிரகப் பிரசாதங்களை அடையவேண்டி வருவார்கள். இவ்வித சமயத்தில் ஜகத்குரு பிரார்த்திக்கவே கௌதம புத்தர், நிஜ ரூபத்தோடு தரிசனமளித்து, அச்சபையிலுள்ளவர்களையும், தத்துவாரா உலகத்திலுள்ளவர்களெல்லாரையும் அனுக்கிரஹிப்பார். கௌதம புத்தருக்கப்பால் ஜகத்குரு பீடமேறிய ஸ்ரீ மைத்திரேய மஹரிஷி விஷயமாய் வரப்போகும் சஞ்சிகையில் எழுதப்படும்,

(இன்னும் வரும்.)

V. நரசிம்மையா.

(தெலுங்கு திவ்யஞான தீபிகையினின்று பத்திராதிபரால் மொழி பெயர்க்கப்பட்டது.)

# மஹாரிஷிகளின் கடிதங்கள்.

——:(o):——

## (மூன்ருவது கடிதம்.)

(இக்கடிதம் மோரிய மஹாரிஷி அவர்களால் ஜில்லா ரிஜிஸ்டிராராக இருந்து காலஞ்சென்ற ஸ்ரீமான் எஸ். இராமசுவாமி ஐயருக்கு எழுதப்பட்டது. ஐயர் மோரிய மஹாரிஷி அவர்களுடைய அங்கீகரிக்கப்பட்ட சிஷ்யராக விளங்கியதோடு கூட சிக்குமுக்குப்போய் அவ்வரிய பெருமானை ஸ்தூல தேகத்தில் பார்க்கும் பாக்கியம் பெற்றவர். இக்கடிதம் 1882 வரு அக்டோபர் மாதம் அவருக்கு வந்தது. இம்மாதத்தில் புதிதாய் வெளிவந்திருக்கும் மஹாரிஷிகளின் கடிதத் தொகுதியில் இது உளது.)

என்னுடைய சீஷனே, (உனக்கு)நல்வாழ்வாக.

நான் கேட்டுக்கொண்டபடி, ஆல்காட் சிஷ்யத்துவத்தின் தத்துவத்தை தெளிவாகச் சொல்லியிருக்கிருர். படிப்பினுலும் அப்பியாசத்தினுலும் கூடிய ஒரு நிலை அது; அந்நிலையிலிருந்து ஜீவன் முக்தனுவதோ அல்லது தவறிப்போவதோ வென்பது முற்றிலும் சீஷனே நிச்சயம் பண்ணக்கூடியது. எங்களுடைய முறைமை சரியாக அறியாதபடி சீஷர்கள் எங்களுடைய உத்திரவுகளை எதிர்பார்த்து காத்து பிரயோஜனமான காலத்தை வீண் கழிக்கிருர்கள். தாங்கள் தாங்களே காலத்தை எப்படி உபயோகிப்பது நல்லது என்று யோசித்து முயற்சி செய்யவேண்டியது. உன்னுடைய கேள்விகளைப் பார்க்க நான் இவ்விதம் சொல்லவேண்டி யிருக்கிறது. நீ எங்களுக்கு சேவை செய்ய உன்னை அர்ப்பணம் செய்கிருய். நல்லது. எங்களுடைய காரியத்தில் காலத்தையும் பணத்தையும் பக்தி சிரத்தையோடு செலவழித்து கஷ்டம் வருமானுல் அனுபவிக்கத் துணிந்துள்ளாய். நல்லது. எங்களுடைய காரியம் நிச்சயமாக மனுஷ வர்க்கத்துடைய காரியம், உண்மையான சமயத்தின் காரியம், கல்வியின் காரியம், அறிவு விளங்கி ஞானமடைவதின் காரியம். அதற்கு, பல ஊர்களுக்கும் சென்று பிரசங்கம் செய்பவர்கள் வேண்டும், பக்தர்கள்



வேண்டும், காரியஸ்தர்கள் வேண்டும், அதற்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கப்பட்டவர்கள் கூட வேண்டும். ஆனுல் எந்த மனுஷனையும் அவ்வாறு முன் வரும்படிக் கேட்கமாட்டோம். அவ்விதம் செய்ய ஒருவன் துணிந்தானுல்,—நல்லது; அவனுக்கும் நல்லது, உலகத்துக்கும் நல்லது. ஏனெனில் மனுஷவர்க்கத்துக்காக உழைப்பது, மிக மேன்மையானது; அதன்பலனே கனவுபோன்ற சிறிய இவ்வொரு ஜன்மத்திற்கு அப்பாலும் பல ஜன்மங்களுக்குப் பரவும். ஆகையால் இப்போது, என்னுடைய சீஷனுகிய நீ உன்னுடைய விதியை உன் கைவசம் செய்து தீர்மானித்துக்கொள். நோயாளிகளைக் குணமாக்க விரும்புகிருய்--அப்படியே செய்; ஆனுல் அது உன்னுடைய நம்பிக்கையைப் போலிருக்கும்—அந்நம்பிக்கை எங்களிடத்தில் எவ்வளவு என்பதைவிட உன்னிடத்தில் உனக்கு எவ்வளவு என்பதே. அந்நம்பிக்கை ஒரு விநாடிநேரம் நழுவுமானுல், (அச்சக்தி) உடனே தவறிவிடும். குட்டி மோரியவுக்கு—(அதாவது) ஆல்காட்டுக்கு—சைகைகளை கற்றுக் கொடுக்கும்படி சொல்லுகிறேன். உன்னுடைய ஆன்ம சக்தியில் நீதிட நம்பிக்கை வைத்துக்கொள். உனக்கு ஜயம் உண்டு. இரண்டு வருஷத்துக்கு ரஜா எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற உன்னுடைய விருப்பத்தைப்பற்றி, அதனுல் உனக்கு வரும் கஷ்டநஷ்டங்களை கணக்குசெய்து தீர்மானம் செய். பிரபுதாத்தகத்தா (புத்தபகவான்) வின் ஞாபகத்தால் உன்னுடைய மனம் பிரகாசமாகி நீ நன்ருகத் துணிவாயாக. ஆனுல் தெற்கே போவதற்கு முன் சின்னட் விஷயமாக காசி மகாராஜாவை நீ போய் பார்ப்பது எனது விருப்பம்; அதைப்பற்றி ஆல்காட் சொல்லுவார். சபைக்காக வேண்டியதை சம்பாதிப்ப தல்லாதபடி, அநேக காரியங்களிலும் அநேக வழிகளிலும், (உத்தியோக) பந்தமின்றி சுயேற்சையாக உழைப்பதானுல், நீ நிச்சயமாக நன்மை செய்வாய். ஆனுல் இவ்வெண்ணம் நியாயமும் நல்ல பலனைக்கொடுப்பதுமானது; அவ்விதம் செய்யத்துணிந்தது நன்றே. கருமத்துக்கு கண் ருந

ஒரு ராஜகுமாரனின் சம்பந்தத்தைப் பற்றி நீ நினைப்பது சரியல்லவென்று நான் சொல்லமாட்டேன்; அந்த ரகசியம் நான் வெளியிடுவதல்ல. அதை நீயே யோசனை செய்துபார். டி—யில் இரண்டுபெயர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு அந்த ரகசியம் தெரியும்; அவர்களைத்தேடிப் பார்.

உனக்கு நாங்கள் சூக்ஷ்மசக்தியை விருத்தி செய்வதைப்பற்றி, அதுகாலத்தில் உண்டாகும்; ஆனால் அவ்வளவு சீக்கிரமாக அல்ல. இயற்கையை தீவிரம் செய்வது நல்லதல்ல, அவ்விதம் நாங்கள் செய்வதும் சரியல்ல. அவ்வம்மை (இயற்கை) உன்னிடத்தில் ஏற்கனவேயே தயாளமாக இருக்கிறாள். என் மகனே, உன்னை ஆசீர்வதிக்கிறேன்.

(மகரிஷி) மோ (ரியா)

சு. வி. கனகசபைபிள்ளை.

பத்திராதிபர், புதுயுகம்.

---

அடுத்த 50 வருஷத்தில்
பிரம்மஞானசபையின் காரியங்கள்.

——:O:——

# டாக்டர் வஸந்தம்மையாரின்

## கன்வென்ஷன் முடிவுரைப் பிரஸங்கம்.

## 27-12-1925.

பிரம்மஞானஸபையின் இவ்வருஷோத்ஸவத்தில் வழக்கப்படி நாம் முன்செல்லுவதை யோஜிப்பதே சிறந்தது. 1875-ம் வருஷத்தில் நமது ஸபை தொடங்கியது. அப்போது பிளவாட்ஸ்கி அம்மையாரும் கர்னல் ஆல்காட் அவர்களும் தம்மைப்பின்னின்று தூண்டிய மஹரிஷிகளைப்பற்றி பகிரங்கப்படுத்தினர். இதில் அவர்கள் ஒரு சிறிதும் கூசவில்லை.



பிளவாட்ஸ்கி அம்மையார் தம் குருதேவருடன் எப்போதும் ஐக்கிய நிலைகொண்டு அவருடைய பிரேரணையால் உழைத்ததாகவும், உலகத்தில் ஸபையை நிலைத்தோங்கச் செய்தது ஆல்காட் அவர்கள் செய்த அரிய உதவியாகவும் தெளிவாய்க் கூறியதுண்டு. அமெரிக்கா ஐக்கிய மாஹாணத்தினின்று இந்தியாவுக்கு வந்து அடையாற்றில் பிரம்மஞான ஸபையின் மூலஸ்தானத்தை நிலைபெறச் செய்தனர். பிறகு 1885-ல் அவர்மேல் வஞ்சகம் மோசமென்னும் பழிபாவம் சுமத்தினர் பலர். ஆயினும் சென்னை ஹைகோர்ட்டுக்கு அணிகலமாய் விளங்கிய டாக்டர் ஸுப்ரமண்யஐயர் அவர்கள் முதலிய பல மெம்பர்கள் அப்பழிபாவங்களை மறுத்து பிளவாட்ஸ்கி யம்மையாரின் மாசற்ற தன்மையை நிரூபித்தனர். அவரும் தம்மால் ஸபையின் பெயருக்குக் குந்தகம் வரலாகாதென்று இந்தியாவை விட்டு ஐரோப்பா சென்றனர். அவர் திரும்பவும் இந்தியாவுக்கு விஜயம் செய்யலாம் என்று எண்ணியிருந்தனர். அது முடியவில்லை. அக்காலத்தில் பிரம்மஞான ஸபைக்கும் பரமரிஷி சங்கத்திற்கும் இருந்த முறைமை மாறியதென்பதை தெளிவுறுத்தி யிருக்கின்றனர். முதலாவது, ஸபையை ஸ்தாபித்த மஹரிஷிகளையும், இரண்டாவது, தமக்கு சிஷ்யர்களாக விருந்து உபதேசிக்கப்பெற்று மஹரிஷிகளையடைய விரும்பிய கோஷ்டியையும், மூன்றாவது, சாமான்ய அங்கத்தினரையும் பற்றிக் கூறி யிருக்கின்றனர். 1881-ம் வருஷத்தில் மேலிரண்டு வகுப்புக்களுக்கும் மெம்பர்களை எளிதில் அங்கீகரிக்கவில்லை. கண்டிப்பான விதிகளை ஏற்படுத்தினர். 1885-ம் வருஷத்தில் ஸபைக்கு நேர்ந்த ஓர் கலகத்தால் அநேக மெம்பர்கள் குப்தவித்தையென்னும் வார்த்தையைக் கேட்கவே பயந்தனர். யாதொரு விசேஷக் கொள்கைக்கும் கட்டுப்படாமல் ஞான விசாரம் செய்யும் மாணவர்களாக மட்டும் நின்றனர். அது முற்றும் நியாயமானதே. இதுவரையும் அப்படித்தான் இருந்திருக்கிறது. மேலிரண்டு வகுப்புக்களும் சிலகாலம் மறைவாகவே இருந்தன. 1888-ம் வருஷத்தில் பிளவாட்ஸ்கி அம்மையார், யார் யார் தம்படிப்பால் ஸர்வ

மத ஸமரஸமான மூலதத்துவங்களில் சம்சயமற்ற உறுதி கொண்டவரே அவர்களை, தாம் கூறிய நிபந்தனைகளுக்கு இணங்கிய பின் மேலிரண்டு வகுப்புகளுக்கும் சிஷ்யர்களாக ஏற்றுக்கொண்டனர். மறுபடி இவ்வாறு குப்தவித்யாலயம் ஸ்தாபிக்கப்பெற்றதும், 1907-ம் வருஷத்தில் பிரமஞான சங்கத்தில் சிலர் சபை ஆரம்பமுதல் விசேஷமாய் அபிமானித்து உதவியவர்கள் திரும்பவும் பிரமஞான சபையின் முதல்வகுப்பாய் நிற்க ஒப்புக்கொண்டனர். அவர்களைப்பற்றிய விவரம் சமீபகாலம் வரை குப்தவித்யா சங்கத்தினருக்கே அளிக்கப்பெற்றது. நம்சபையின் சரித்திரத்தில் சென்ற 50 வருஷங்களாக, நல்ல உழைப்பை கைக்கொண்டு அரிய நன்மைகளை இவ்வுலகில் சாதித்த இனியும், மற்றோர் 50 வருஷத்தில் இயற்றவேண்டிய காரியங்களை தொடங்கும் ஸமயம் இவ்வுலகத்திற்கே ஓர் புதுயுகம் தொடங்கும் தருணமாய் இருக்கிறது. ஜகத்குருவானவர் பழமையான தர்மங்களைப் புதுமாதிரியாக எடுத்துரைக்க வரும்போதெல்லாம் மனுஷ்ய ஜாதியில் ஓர் புது கிளை வர்க்கம் இவ்வுலகில் தோன்றுகிறது. ஆர்யவர்க்கத்தினுள் ஓர் புதுக்கிளை வகுப்பு உண்டாகி வருகிறது என்பதற்கு சாஸ்திரீயமான ருஜு உள்ளது. இப்போது வளர்ந்து வரும் நாகரீகம் சகோதரத்வத்தையே மூலதர்மமாகக் கொண்டது. அதனாலேயே பிரம்மஞான ஸபையின் முதல் நோக்கம் ஸர்வத்ர ஸோதரத்வ மாகும்.

நம் காலம் இத்தகைய விசேஷ மஹத்துவம் வாய்ந்தது. ஜகத்குருவானவர் சீக்கிரம் நமக்குள் தோன்றுவர். இக்காலம் உலகில் நாநாவித தேசச்சண்டைகளும், சாதிச் சண்டைகளும், தொழிற் சண்டைகளும், தேச வாழ்க்கைக்கு இன்றியமையாத உத்யோகங்களின் நிலைகுலைவும், ஆகிய இத்தகைய நிர்க்கதியான நிலையில் நாமிருக்கும் போது ஸ்ரீ ஜகத்குருவானவர் அவரது ஹிமாலய ஆச்ரமத்தினின்றுவந்து, அழிந்துபோகும் இவ்வுலகத்தை மீட்கவேண்டியது பரம அவசியமன்றோ! இந்த நிலையில் அவர் வாராதிருப்பாராகில் அதுதான் விந்தையேயன்றி, உலக விகாசத்தை நேர்வழியில் நடத்த அவர் இவ



தருணத்தில் வருவதொரு புதுமையுமில்லை. இப்போது உலகத்தில் அதிகாரிகளின் தேர்ந்த அபிப்பிராயங்களை விசாரிக்குமிடத்து ஓர் பெரிய மாற்றம் உண்டாகக் காத்திருக்கிறதென்பது தெளிவாகும். பௌதிக சாஸ்திரம் மனிதகோடிகளுக்கு விசேஷ உபகாரமாயிருக்கவேண்டியது போக, சென்ற மஹாயுத்தத்தில் விளைந்த ஜீவநாசத்திற்கு அதுவே காரணமாயிருந்திருக்கிறது. பௌதிக சாஸ்திரமானது சீர்திருத்தவேண்டும். இல்லாவிடில் உலகத்தையே அழித்துவிடும் போலிருக்கிறது. இந்நிலையில் சோதர வாஞ்சையையும் தயவையும் அநுதாபத்தையும் அறிவையும் பரவச்செய்யும் புது வழிகளை கண்டுபிடித்தல்வேண்டும்.

நம் உப அக்ராஸனர் பிரஹ்மஞான சபையினால் உலகில் விளைந்த மாற்றங்களையோர் பத்திரிகையில் சுருக்கமாயெழுதியிருக்கிறார். அவைகளைக் கவனிக்குமிடத்து, உலகத்தில் அபிப்பிராயங்கள் எவ்வளவு விசாலமாகி யிருக்கின்றன வென்பதும், ஒருவர் தாம்கொண்ட கொள்கைகளுக்காகப் பிறரால் சரீர ஹிம்ஸை செய்யப்படுவது ஒழிந்து போயிற்றென்பதும் நன்கு துலங்கும். ஒருவர்கொண்ட கொள்கைக்காக அவர் சித்தத்தையும் மநத்தையும் புண்படுத்தி வாதனை செய்வது இன்னும் வழக்கத்திலுள்ளது, அதற்கு நிவர்த்தி ஸர்வலோகஸமரஸ மார்க்கத்தைப் பரவச்செய்வதேயாம். அதன் தத்துவங்கள் யாவும் ஒவ்வொரு மதத்திற்கும் பொதுவாயுள்ளன. ஸர்வலோக ஸமரஸ மார்க்கத்தைச் சேரும் ஒவ்வொரு பெரிய மதத்தினரும் தத்தம் மதத்து ஸம்பிரதாய முறை சடங்குகள் முதலிய தனி விசேஷங்களை முற்றும் பாதுகாத்துக்கொள்ளலாம்.

ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்திற்குரிய ஸம்ஸ்காரங்களை நடத்துவதற்குரிய ஏற்பாடு உள்ளது. பல சமயங்களில் ஹிந்துப்பெற்றோர்கள் சிலர் தம் குழந்தைக்கு நான் ஓர் சுப ஸம்ஸ்காரம் செய்வேனாயின், அது மிகுந்த க்ஷேமத்தை யுண்டாக்குமென்ற நம்பிக்கையுடன் என்னை

அவ்வாறு செய்யக்கேட்டிருக்கின்றனர். நான் ஹிந்து மதத்திற்பிறவாத அளவில் ஹிந்து ஸம்ஸ்காரத்தைச் செய்வது உசிதமல்லவென்று சொல்லியிருக்கிறேன். அப்படியே லிபெரல் கத்தோலிக் சர்ச்சு விஷயத்திலும். பல மதங்களில் அநுதாபம் எனக்குண்டு. ஏனெனில் ஒவ்வொன்றும் ஜகத்குருவாலேயே ஸ்தாபிக்கப் பெற்றதாகும். அவரை அநுசரிப்பவன் அவர் ஸ்தாபித்த மதங்களில் எதைத்தான் நிராகரிப்பான்? ஆயினும் அம்மதங்களின் காரிய நிர்வாகத்தில் எனக்கு பாத்தியமில்லை. ஒவ்வொரு மதத்திலும் நடத்தப்படும் பூஜை முதலியக்ரியைகள் சிலவற்றில் நான் கூட இருத்தல், தகும் எனினும், வேறுகாரிய நிர்வாகபாத்யங்கள் எனக்குக்கிடையா.

உதாரணமாக, யூகாரிஸ்டு சடங்கில் நான் கூட இருப்பினுல் மட்டும் பிஷப்புகளை தேர்ந்து எடுக்கும் ஓட்டு உரிமை எனக்கு இலது. ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய ஸமஸ்தானத்தில் ஓர் ஞானியான பிராம்மணன் ப்பிரவேசித்த மாத்திரத்தில் பகவான் ஸிம்மாஸனம் விட்டிறங்கி ரிஷியின் பாதம் பணிந்த சரித்திரம் ஹிந்துக்களாகிய உங்களுக்கு ஞாபகம் இருக்குமே! இந்நாளில் அம்மாதிரி மரியாதை போயிற்று. ஆனல் முற்காலத்தில் அரசாங்கத்தில் பெரியவர்கள் பரஞானத்தில் சிறந்தவர்களை மதித்தனர் என்பது தெளிவாகிறது. இவ்வழியில்தான் நாம் இனி உழைத்திடவேண்டும். நீங்கள் பிறந்த மதத்திலேயே உங்கள் ஆத்மாவுக்கு சாந்தி ஏற்படுமானல் அதுவே போதும்.

ஒரு மதமாவது, சங்கமாவது பிறரை தன் வசப்படுத்த முயலமாட்டாது. இந்த ஸர்வலோக ஸமரஸ மதத்தில் எந்த மதமும் நீதி நெறியைக் கடைப்பிடித்த எந்த ஸமாஜங்களும் ப்ரவேசிக்கலாம். இதனல் மனிதகுலம் ஒன்றுபட்டு ஸமாதானமடையுமே யொழிய ஒருபோதும் சச்சரவுபட்டு பிரிவினை அடையாது. சில நாளுக்குமுன் பிரம்மஞான சபை கவுன்ஸில் கூட்டத்தில் இக்கேள்வி விவகரிக்கப்பட்டபோது பிரம்-



ஞானஸபை ஸர்வலோக ஸமரஸ மார்க்கத்தில் சேரவேண்டும் என்று எழுபத்தேழு தேசிய வகுப்பு பிரதிநிதிகள் ஸம்மதி கொடுத்தனர். ஒருவர் கூடாதென்றனர். இன்னும் மூவர் ஒன்றும் சொல்லவில்லை. அடுத்த ஐம்பது வருஷங்களில் அதன் காரியம் விசேஷமாய்ப் பரவும். அதனுள் உலகத்திலுள்ள ஸகல மதங்களும் நீதிநெறி பற்றிய ஸகல ஸமாஜங்களும் வந்து சேரும்படி அதன் கொள்கைகளை பிரசாரம் செய்தலாகும். ஏனெனில் ஸர்வலோக ஸமரஸ மதத்தில் மனிதர்யாரைத்தான் மெம்பராக ஒட்டாமல் தடுக்க முடியும்? உதயதிசை நக்ஷத்திரசங்கமும் அதில் சேர்ந்திருக்கிறது. இன்னும் கொஞ்சநாளில் மற்றவைகளும் சேரும் என்றுநினைக்கிறேன்.

இரண்டாவது பெரிய இயக்கம் ஸர்வலோகஸமரஸமான வித்தியாபீடம். அதில் நடைபெறும் கல்விமுறை அதிபிராசீனவழியும் அதிநவீனவழியும் சேர்ந்ததாகும். இந்தியாவின் புராதனநாகரிகத்தில் செழித்தோங்கிய வித்தியாபீடங்களைப்பற்றி ஆராயுமிடத்து, அவைகள் அரண்யங்களிலே அமையப்பெற்றிருந்தனவாகத் தெரியவரும். அரிய பெரிய உபநிஷத்துக்கள் சில அங்கேயே இயற்றப்பெற்றன. பலர் தம் ஆயுள் நாள்முழுமையும் ஓர் மஹரிஷியை அண்டி இயற்கை யழகுவாய்ந்த அரணிய கலாசாலைகளில் வஸித்து வந்தனர். இக்காலநவீன வித்தியாபீடங்களும் அப்படிப்பட்டவைகளாகவே இருப்பதுதான் மேன்மையென்று புலப்படுகிறது. இந்தியாவின் சிறந்த இலக்கியங்கள் இயற்கையிலுள்ள சர்வ ஜீவராசிகளுடனும் (மனுஷ்ய, மிருக, ஒஷதி வர்க்கங்களும், தேவரிஷி பிதுர்கணங்களும்) நெருங்கிப் பழகத்தக்க ஆரணிய ஆச்சிரமங்களிலேயே பிறந்தன. அவைகள் இப்போதும் உலக முழுவதிலும் கொண்டாடப்படுகின்றன. அக்காலத்திலும் பற்பல துறைகளில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் கல்விபயின்றனர். இந்தியாவின் சரித்திரத்தில் மத்தியகாலத்து வித்தியாபீடங்களும் பிரபலமாகவே இருந்தன. வட இந்தியாவில் தக்ஷசிலை என்னும் இடத்தில் பெரிய

...ந்தோர் வித்தியாபீடம் இருந்தது. யாரலீக்கத்தினின்று இந்தியாவிற்கு படையெடுத்து வந்தவர்களால் ஓர் பத்துதரம் அங்காடு ஜயிக்கப்பட்டபோதிலும் அந்த வித்தியாபீடத்தை யாவரும் பூஜ்யதையாகவே மதித்தனர். அதை எவரும் தொட்டதில்லை. மாணவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட முறையை ஜாதக கதைகளில் விவரமாய் காணலாம். நல்ல கல்வி வருவதற்கு குறைந்தபக்ஷம் பதினாறு வருஷம் பிடித்தது. அரசர்களும் தம்குமாரர்களை அங்கு படிப்புக்காக அனுப்பினர். அம்மாணவர்கள் தம் குருவுக்காக தக்ஷிணைகள் எவ்வளவு கொண்டுபோய்க் கொடுத்தாலும், அவர்கள் தமக்கென்று யாதொரு பணங்காசும் வைத்துக்கொள்ளலாகாது. இரண்டு வஸ்திரங்களும் ஒருஜோடி செருப்பும் தவிர எதுவும் வைத்துக்கொள்ளக்கூடாது. யாதொரு குருதக்ஷிணையும் கொடுக்க இயலாதவன் குருவின் வீட்டுக்காரியங்களைக் கவனித்துக்கொண்டு இலவசமாய்ப் படித்து வந்தான். அதிகாரத்தை வகிக்கவேண்டிய அரசகுமாரர்கள் அதற்கு ஆயத்தமாகப் பணிந்து நடக்கப் பழகிக்கொண்டனர். ஞானத்தில் முதியோர்களை மரியாதைசெய்யப்பழகினர். இந்தியாவில் இத்தகையகுணங்களைத் தழைக்கச்செய்தல் அவசியம். குரு உண்மையான குருவாகத்திருந்தினால் சிஷ்யர்களும் உண்மையான சிஷ்யர்களாவர். சில சமயம் மாணவர்களுக்கு குருபக்தியையும் விசுவாஸத்தையும் பற்றி யான் எடுத்துரைக்க வேண்டுமென்று பலர் என்னை வேண்டிக்கொண்டதுண்டு. அப்போது நான் சொன்னதென்ன? முதலில் குருவாயிருப்பவர் தம் மாணவர்களிடத்தில் சாந்தர்களாகவும் மிருதுவான சுபாவமுள்ளவர்களாகவும் பழகுவது அவசியம். ஸர்வலோகஸமரஸ வித்தியாபீடத்தில் சேரும் கலாசாலை ஒவ்வொன்றிலும் குருவின் கடமைகள் இன்ன, மாணவர்களின் கடமைகள் இன்ன என்பது தெளிவாய் எடுத்துரைக்கப்படும். உபாத்யாயர்கள் முரட்டுத்தனமாகப் பயமுறுத்தாமல், அன்பின் வலிமையால் மாணவர்களை அடக்கியாளவேண்டும். உபாத்யாயருக்கு பயந்தால் அடங்கியிருப்பவர்கள், அவர் எதிரே



தமிழ்நாடு

இருக்குமளவும் கீழ்ப்படிந்த போதிலும் அவர் சென்றவுடன் அடக்கம் போய்விடும். அன்பினால் [illegible] அடக்கம் மாணவர்களுக்கு எப்போதும் நற்குணமாக விளங்கும். இந்தியாவில் யாம் ஏற்படுத்திய கல்விச்சாலைகளில் எமது அனுபவத்தில் இது தேர்ந்த விஷயம். பிரஹ்மஜ்ஞான பள்ளிக்கூடங்களிலுள்ள எமது மாணவர்களின் சுறுசுறுப்பையும், தேஜஸ்ஸையும், முகவிலாசத்தையும், குதூகலத்தையும், மட்டுமரியாதையையும் பற்றி காசியிற்போலவே தென்னிந்தியாவிலும் சர்க்கார் இன்ஸ்பெக்டர்கள் சிலாக்கியமாய்க் கூறுகிறார்கள். எமது உபாத்தியாயர்கள் தாம் கற்பிக்கும் பொருட்டு எத்தனையோ தியாகம் செய்கிறவர்கள். எவ்விதமான தண்டனையும் எமது பள்ளிக்கூடங்களில் உதவாது. குரூரத்தொழில்களின்றிப் படிப்பிக்க மாட்டாத உபாத்தியாயர்கள் மாணவர்களை மனம் கலங்கச் செய்யாதிருப்பார்களாக. அதைவிட அவர்கள் கல்லை உடைக்கும் வேலைக்குப் போகலாமே! கல்வி முறையில் இக்கருத்துக்களை ஒப்புக்கொள்ளும் கல்விச்சாலைகளெல்லாம் ஸர்வலோக ஸமரஸ வித்தியா பீடத்தில் சேர்ந்து கொள்ளலாம். பரீக்ஷைகளிலும் எமது காசிப்பெண்கள் முதன்மையாகத் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர். மேற்படி வித்யாபீடத்தின் பயனாக ஒவ்வொரு மாணவ மாணவியும் தேசீயவாழ்க்கைக்கு அவசியமான ஓர் காரியத்தை நிர்வகிக்குமாறு பழக்கப்பெறுவர்.

பகவத்கீதையில் வருணங்களை குணகர்மங்களுக்கேற்றபடி வகுத்ததாக பகவான் சொன்னதன் தாத்பர்யத்தை அறிவீர்களாக. ஒவ்வொரு வருணத்தார்க்கும் அவரவர்க்குரிய குணமும் தொழிலும் இருக்கும்வரை, வெவ்வேறுவருணத்தார்களால் தர்மம் ஒழுங்காக நிறைவேறியது. இதைத்தான் மேல்நாட்டார் தொழிற் கல்வி பயிற்றுதல் அவசியம் என்கின்றனர். எப்படிப்பட்டவர்க்கும் உயர்வான ஓர் பொதுப்படிப்பும் அவரவர் சுபாவத்திற்கும் சக்திக்கும் ஏற்றதொழிற்படிப்பும் அவசியம். எளிமையையே தனமாகக்கொண்டு தன்ஞானத்தை எல்லோர்க்கும் கொடுத்துதவிய பிராமணன்

தன் அயலாரைவிட சௌக்யமாய் வாழ வேண்டுமென நினைத்து தன் மூளையைப் பணம் சம்பாதிப்பதில் உபயோகித்தான். ஏழைகளைக் காப்பாற்றியும் தொழிலாளிகளுக்கெல்லாம் சரியான வேலை கொடுத்து வாங்கியும் அநாதைகளான குழந்தைகளையும், கைம்பெண்களையும் பாதுகாத்தும் வந்த க்ஷத்ரியன் தன் தொழில்களை மறந்தான். முற்காலத்தில் குடிகளில் ஒருவன் வீட்டில் ஏதாவது களவுபோனால், அதைப் போல நான்கு மடங்குவிலை அரசனிடமிருந்து வாங்கிக்கொள்வார். அரசன் தன் கடமையைச் சரியாய்ச்செய்தால் நாட்டில் திருடர்களிரார் என்பது கன்பூஷியஸ் சொன்ன விஷயம். அப்படி நாமும் மாணவர்களின் குணாபிவிருத்திக்குச் சாதகமான கல்வியை ஜனங்களுக்குப் புகட்டினோமாயின், அப்புராதன முறை அழகாய் நிலைபெறும். அந்தஸ்து உயர உயர அதற்குரிய தியாகமும் உண்டு. அந்த தர்மத்தால் தான் இந்திய நாகரிகம் இன்னும் நீடித்து நிலைக்கும் தன்மை வாய்ந்ததாகவிருக்கிறது. இத்தகைய ஸர்வலோக ஸமரஸ வித்யா பீடத்தில் சிலாக்கியமான கல்வியே லக்ஷியமாகும். அதை எம்மால் கூடியமட்டும் வெவ்வேறு தேசத்தார்க்கு அர்ப்பிக்க முயலுவோம்.

மூன்றாவது, குப்தவித்யையை மறுபடி உத்தாரணம் செய்வது, எத்தனை கிரியைகளில் ஹிந்துக்களாகிய நீங்கள் தேவர்களை அழைக்கிறீர்கள்? ஆனால் அவர்கள் வருகிறதில்லை. அவ்வாறே தான் ஒவ்வொரு மதத்திலும், நேற்று என் சோதரர் ஒருவர் சொன்ன பிரகாரம், நம் ஜபங்களுக்குக் கட்டுப்பட்டு தெய்வங்கள் உடனே வருமானால், ஜனங்கள் ஆச்சரியப்படுவதோடு பயந்தும் போவார்கள். ஆயினும் அத்தேவர்களையே ஜனங்கள் வரவழைக்க விரும்புகிறார்கள். அநேகர் திட நம்பிக்கையால் அத்தேவர்கள் நமக்குதவி செய்கின்றனரென்றுணர்ந்து செய்யும் கிரியைகளால் அவர்களை வரவழைத்தும், தம் பார்வை இத்தூலவுலகிற்கப்பால் செல்லும்படி சித்தி பெறுகின்றனர். ஸ்தூலலோக சாஸ்திரத்தையும் ஸூ



க்ஷ்ம லோகங்களைப் பற்றிய சாஸ்திரத்தையும் அறிந்து மதங்களின் ஸம்ஸ்காரங்களைச் செய்யவிரும்பும் சீஷர்களைக்கொண்டு ஒவ்வொரு மதத்திலும் ஸம்ஸ்காரங்கள் உண்மையானவைகளாக உத்தாரணம் செய்யப்படும்.

இங்கு வெறும் ஆகாசத்தில் பேசும் செய்தியை கம்பியில்லாமலே வெகுதூரத்தில் கேட்கச்செய்வது உங்களுக்கு ஆச்சரியமாயிராது. முதன்முதல் இங்கு சத்தவர்த்தனி என்னும் கருவி அமைக்கப்பெற்றதால் யான் பேசியதை ஏராளமான ஜனத்திரள்கள் ஆயிரக்கணக்காகக் கேட்கிறதை என் கண்ணாரக்காண்கிறேன். இவ்வாறு ஜனங்களுக்கு ஸாதகமான எத்தனை இரகசியங்களை இன்னும் கண்டு பிடிக்கலாம் அதைவிட்டு விநாசகரமான சக்திகளை பௌதிக சாஸ்திரக்காரர்கள் அறியப் பிரவர்த்திப்பது விபரீதமே.

இம் மும்முறைகளாக பிரஹ்மஞானசபை உழைப்பதற்கு நீங்கள் யாவரும், உலகின் நாநா பாகங்களிலுள்ள மற்ற பலரும் ஸாதகமாயிருப்பீர்களாகில், இவை சிலரால் செய்யக் கூடியதல்லவென்றும், யாம் எமக்கும் மேற்படிகளிலுள்ளவர்களுக்கு அடங்கி நடத்தல் தான் கூடுமென்றும் உணருவீர்களாகில் மெத்தவும் காரியமுண்டு. நீங்கள் எங்களைப்பற்றி பெரிதும் கருதி நம்பவேண்டிய தொன்றுமில்லை. மேலுலகத்திலுள்ள மஹரிஷிகளுக்கு நிமித்த மாத்திரமாய் இருக்கிறோமேயன்றி, யாம் பணியாளர்களாயிருக்கிறோமே யன்றி வேறு விசேஷமில்லை. காலையிலும் மாலையிலும், முறையே நான் செய்யப்புகும் காரியத்தையும், நான் செய்த காரியத்தையும் அப்பரமரிஷிசங்கத்தார்க்கு அர்ப்பிக்காததினமேயில்லை. நாம் கொடுப்பதில் இல்லை விசேஷம். உங்களைப் போல் யாமும் ஏழைகளே. ஆனால் யாம் அப் பரமரிஷிசங்கத்திற்கு வாய்க்காலாக அமைந்திருப்போமென ஸமர்ப்பணம் செய்து கொள்கிறோம். மனிதர்களுக்கு அதைவிட மஹிமையும் அதைவிட பலமும் வேறில்லை. நாம் பக்தியாலும் சிரத்தையாலும், நமக்கென்றொன்றையும் வைத்துக்கொள்ளா

மல் பிறருடைய ஊழியத்திற்கென்றே ஏற்பட்டு, இந்தியாவிற் குழைப்போமாகில், எவ்வளவுக் கெவ்வளவு அதில் தீவிரமாய் நிற்போமோ அவ்வளவுக்கவ்வளவு உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் இன்னும் எங்கெங்கு இருப்பவர்களுக்கும் நல்ல உபகாரிகளாவோம். பரமோபகாரிகளான மஹரிஷிகள் இவ்வுலகில் தம் அருள் வாய்க்காலாக இருக்கத் தக்கவர்களைத்தேடிய வண்ணமாயிருக்கின்றனர். அவ்வாறு அவர்களுக்கு அருள்வாய்க்காலாக இவ்வுலகத்தில் இருப்பது, வேறெவ்வித உண்மையைக் கண்டுபிடிப்பதையும்விட பெரிய கௌரவமன்றோ?

B. S. இராமஸுப்பையர்.

மொழிபெயர்த்தோன்.

---

# குறிப்புகளும் ஸமாச்சாரங்களும்.

சென்ற டிஸம்பர்மீ 21வ முதல் 31வ முடிய அடையாற்றில் பிரம்ம வித்யா மஹாஸபையின் ஜூபிலி மஹோத்ஸவம் வெகு சிறப்பாய் நடைபெற்றது! 33 தேசங்களினின்றும் சுமார் 3000 பிரதிநிதிகள் வந்திருந்தனர். ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்ட்ரேலியா முதலிய இதர நாடுகளிலிருந்து வந்தவர்கள் 400 பேர். ஆஸ்ட்ரேலியாவிலிருந்து மாத்திரம் 76 பேர் வந்திருந்தனர். 24 தேசங்களின் ஜெனரல் ஸெக்ரெடேரிகள் ஆஜராயிருந்தனர். சில பிரதிநிதிகள் இப்பூமியின் பாதி தூரத்திற்கு மேற்பட்டவிடங்களினின்றும் வந்திருந்தனர். மஹாஸபையின் வருஷாந்தர மீட்டிங் 24வ பகல் 1 மணிக்கு ஆலாவிருக்ஷத்தினடியிற் கூடியபொழுது, அந்தந்த தேசத்திலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் தேசவாரியாகப் பிரிந்து உட்கார்ந்திருந்தனர். உப அக்ராஸனாதிபதியவர்கள் அந்தந்த தேசத்தின் தேசப்பெயரைச் சொன்னவுடன் அவர்கள் எழுந்து நின்று வலதுகையை அக்ராஸனாதிபதியான நமது அன்னையாரை நோக்கி உயர்த்தி வந்தனம் செலுத்திய காக்ஷியைப் பார்க்கப் பரமானந்தமாயிருந்தது. வெகுதூரத்திலுள்ள ஐஸ்லாந்து என்னும் தீவினின்றும் வந்திருந்தவர்கள்



எழுந்த போது ஸபையோர் இடிமுழக்கம் போன்ற கரகோஷம் செய்தனர். ஆர்ஜன்டைனாவிலிருந்து வந்திருந்த ஓர் இளைஞர் எழுந்த போதும் அப்படியே ஸபையோர் சந்தோஷ ஆரவாரம் செய்தனர். இப்பாரின் கண்ணுள்ள இத்தனை தேசத்தார்களை இந்தியர் பார்க்கக் கொடுத்துவைத்த பாக்கியத்தை என்னென்று வர்ணிப்பது! பல தேசத்தவர், பல மதஸ்தர்கள், பல ஜாதியார், பல வகுப்பினர், பல நிறத்தினர், பல அந்தஸ்திலுள்ளவர் ஓரிடத்தில் ஒன்றுகூடிக் குதூகலமாய் சில தினங்கள் கடத்திய காலத்தை வாழ்நாளின் எத்தகைய சிரேயஸ்கரமான பாகமென்று எப்படியெழுதச் சாத்தியமாகும்! அதுவோர் ஸ்வானுபவம். உண்மையான ஆநந்த நிலை. முன்செய்த தவப்பயன். பிற்காலப் பெருமைக்கு அவசியமான சக்தி விசேஷம்.

பிரதிதினமும் காலையில் பாரத ஸமாஜ ஹிந்து ஆலயத்தில் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண மூர்த்தியவர்கள் பூஜை நடத்தினர். லிபரல் கத்தொலிக் சர்ச்சு கிறிஸ்துவ வழிபாடுகளுக்காக அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் பிஷப் C. W. லெட்பீட்டர் அவர்கள் ஆராதனைகள் புரிந்தனர். ஸபையின் தலைமைஸ்தான உபந்யாஸமண்டபத்தில் நமது அன்னையார் ஸர்வமதங்களின் வேத கோஷப் பிரார்த்தனைகள் நடத்தினர். வந்திருந்த பிரதிநிதிகள் இம்மூன்றிடங்களில் தினமோரிடமாகப் போய் உண்மையான பூஜாவிதிகளைக்கண்டு அகமஹிழ்ந்து நடவடிக்கைகளிற் கலந்துகொண்டு தீர்த்தம், பிரஸாதம் முதலியவைகள் கிடைக்கப்பெற்று வெகு பரிசுத்த உணர்ச்சியுடன் திரும்பினர். ஸ்ரீ புத்தபகவான் ஆலயம் கட்டப்பட்டு அநேகமாய் முடிவடைந்து 30வ பூஜை ஆரம்பமாயிற்று. பார்ஸிகளுடைய அக்னி ஆலயம் ஒன்றும் யூதர்களுடைய ஆலயமொன்றும் கட்ட அஸ்திவாரக் கற்கள் நாட்டப்பட்டன. முஸ்லீம் மசூதியொன்றும், லிபரல் கத்தோலிக் கிறிஸ்தவ ஆலயமும் கட்ட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஸர்வமத ஸகோதரத்வத்தை பிரசாரம் செய்துவரும் பிரம்மவித்யா மகாசபையின் தலைமை ஸ்தானத்தில் இப்போது ஜீவித்துள்ள மதங்களின் பூஜாஸ்தலங்கள் நிலைபெற்றிருப்பது மிகத் தகுதியுடையதாகுமன்றோ!

பிரபலமான மீட்டிங்குகள் அடையாற்றில் அழகாயமைந்துள்ள ஆலாவிருக்ஷத்தினடியில் நடைபெற்றன. இவ்வுலகமெங்குமுள்ள 32தேசங்களில் தன் கிளைகளைப் பரப்பியுள்ள நமது மஹாஸபையின் தலைமை ஸ்தானமான அடையாற்றின் கண்ணிலை

பெற்றோங்கி வளர்ந்திருக்கும் இப்பெரிய ஆலாவிருக்ஷம், தன் கிளைகளை வெகுதூரம் பரப்பி, அவைகளினின்றும் விழுதுகள் இறங்கி பூமியில் வேரூன்றி 38 தேசங்களினின்று வந்தவர்களின் பெருங் கூட்டத்திற்கு இடமளித்த காக்ஷி ஸகலருக்கும் ஆச்சரியத்தை விளைவிக்காமலிரா. இதுதான் அடையார் ஸ்தல விருக்ஷம் என்று அறிந்தனர். இதுவரையில் நேரில் பார்த்திராதவர் தரிசித்து ஆச்சரியமடைந்தனர். இப்புவியில் வெகுதூரம் வியாபித்துள்ள நமது மஹாஸபையை ஞாபகப் படுத்துவதற்கு இதுவோர் அடையாளமன்றோ!

முதல்நாள் பிரஸங்கத்திற்கு வந்திருந்தவர் சுமார் 5000 பேர் இருக்கலாம். இக்கூட்டம் அடுத்த தினங்களில் வரவர விர்த்தியாகி, நான்காவது நாள் டாக்டர் அன்னி வஸந்தம்மையாரின் காலை உபந்யாஸத்தின் போது, சுமார் 10000 பேர் வரையில் வந்திருந்தனர் என்று தாராளமாய்ச் சொல்லக்கூடியதாய் கூட்டம் அவ்வளவு ஜாஸ்தியாயிருந்தது. அன்று சென்னையிலிருந்து வந்திருந்த மோட்டார் வண்டிகள் உபந்யாஸ ஸ்தலத்திற்குப்போகும் வழியின் இருபக்கங்களிலும் ஏராளமாய் நிறுத்தப்பட்டிருந்த காக்ஷியைப் பார்த்தால் சென்னையிலிருந்து பல பிரபலஸ்தர்கள் வெகுபேர் விஜயம் செய்திருந்தது நன்கு விளங்கும். கூட்டம் ஒவ்வொன்றிலும் சாந்தியும் அமைதியும் நிலவியிருந்தது. வந்திருந்த ஒவ்வொருவருக்கும் உபந்யாஸம் தெளிவாய்க் கேழ்க்கும் பொருட்டு ஞானசபை நாற்புறமும் பரப்பித்தரும் ஓர் மின்சார யந்திரம் அங்கு வைக்கப்பட்டிருந்தது. இது இந்தியாவில் உபயோகித்தது இங்குதான் முதல் தடவையாகும். இந்த யந்திரம் அமெரிக்காவிலிருந்து தருவித்து இவிடம் ஒருவாரத்திற்கு வைப்பதற்குரூபாய் 2000 செலவு பிடித்ததாம். இதன் கிரயம் ரூ. 6000 இதை இப்பொழுது அடையாற்றில் ஸொஸைட்டிக்கு வாங்கியிருக்கிறார்கள்.

இந்த ஜூபிலி உத்ஸவ காலத்தில் சிறு குழந்தைகளுக்குக் கூட ஓர் மீட்டிங்கு நடத்தப்பட்டது. அடையார் வாசிகளின் சிறு குழந்தைகளையும் வந்திருந்த பிரதிநிதிகளின் சிறு குழந்தைகளையும் உப அக்ராஸனாதிபதியான ஸ்ரீமான் C. ஜினராஜ தாஸர் அவர்கள் ஆலாவிருக்ஷத்தினடியில் 21௳ மாலை வரவழைத்து அவர்களுக்குச் சில வேடிக்கை விளையாட்டுகளைக் காட்டி உத்ஸா



கப்படுத்தி, ஐரோப்பிய குழந்தைகளுக்கு இந்தியப் பொம்மைமுதலிய விளையாட்டுக் கருவிகளையும் இந்தியச் சிறுவர் இவர்களுக்கு புதுமையான சில சாமான்களையும் பரிசளித்து, கடைசியாய் இனிய சிற்றுண்டிகள் வழங்கி, குழந்தைகளைப் பெருமைப்படுத்தினதானது, நாம் எந்த சமயத்திலும் குழந்தைகளை மறக்கலாகாதென்றும், அவர்களை நாம் முதலில் கெவனிக்க வேண்டுமென்றும் நமக்கு அறிவுறுத்தத்தக்க விதமாய், இந்தக் குழந்தைகளின் மீட்டிங் ஜூபிலி உத்ஸவ ஆரம்பதினத்திலேயே நடத்தப்பட்டது குறிப்பிடத்தகுந்தது.

22௳ மாலை பல தேசங்களின் சித்திரவேலைகளும் கைத்தொழில் சாமான்களும் அடையார் பழைய ஸ்டார் ஆபீஸில் வைக்கப்பட்டு அக்காக்ஷி சாலையை நமது அன்னையார் முதலில் திறந்து வைத்தனர். அந்தசமயம் நமது அன்னையாரின் அழைப்புக்கிசைந்து பல பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தனர். மறுதினங்களில், காலையிலும் மாலையிலும் இரண்டிடங்களில், அதாவது இந்தஇடத்திலும் அடையார் புஸ்தகப்பிரசுராலயத்தின் (T.P.H) மேல் மாடியிலும் ஸகலரும் வந்து பார்க்கும்படி காக்ஷிசாலைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன. மனதைக் கவரத்தக்க அற்புத அழகுவாய்ந்த வேலைத் திறங்களைப் பார்த்துப் பலரும் நேத்திரானந்தத்தை யடைந்தனர்.

ஸங்கீதக் கச்சேரிகள், வீணை முதலிய சில வாத்யக் கச்சேரிகள், ஹரிகதைகள், புகைப்படக் காக்ஷிகள், ஜாவாக்காரர்களின் ஆட்டங்கள் ஆகிய இவைகளில் ஒன்று பிரதி தினம் இரவிலும் நடத்தப்பட்டது. ஜாவாக்காரர்களின் ஆட்டங்களும் நாட்டியங்களும் பலருக்கும் புதுமையானவை. அந்த சாஸ்திரத்தில் ருஜியுள்ள பலர் அந்த ஆட்டங்களை வெகுவாய் சிலாகித்தனர். ஸங்கீதக் கச்சேரிகள் நடைபெற்றபோது, இந்துதேசத்திலுள்ள பலவித ஸங்கீதங்களை ஐரோப்பா முதலிய அந்நிய நாட்டினர் கேட்டு ஆநந்தமடைந்தனர். ஹிந்துக்கள் ஐரோப்பா, அமெரிக்கா, பர்மா முதலிய இதர நாட்டினரின் ஸங்கீதங்களையும் கேட்டு அப்படியே ஆநந்தமடைந்தனர். இம்மாதிரி ஸமயம் கிடைப்பது அருமையன்றோ!

இந்த ஜூபிலி உத்ஸவத்திற்கு ஏராளமான ஸ்திரீகள் வந்திருந்தனர். அவர்களுக்கென்று ஏற்படுத்தப்பட்ட மீட்டிங்குகளில் ஸ்திரீகளின் முன்னேற்றத்தைப்பற்றிப் பல அரிய பிர

ஸங்கங்கள் நடைபெற்றன. ஸ்திரீகளின் முன்னேற்றத்தை நாடி உழைப்பதில் ஸ்திரீகளுக்கு சகாயம் புரியவேண்டியவர்கள் ஆடவர்களென்ற காரணத்தினால் அவர்களும் அங்குபோக அநுமதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் உபந்யாஸ மண்டபத்தில் ஏராளமான ஸ்திரீகள் கூடியிருந்து இன்னும் வெளியே நின்ற ஸ்திரீகளுக்கு இடங் கிடைக்காமலிருந்ததால் அந்த ஸ்திரீகளுக்கு இடம் ஏற்படுத்துவதற்காக மண்டபத்திலிருந்த ஆடவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்கள் அப்படி நேர்ந்ததற்கு வெகு சந்தோஷப்பட்டு வெளிவந்தனர்.

28௳ உதயதிசை நக்ஷத்ர மஹாசங்கத்தின் மீட்டிங்குகள் நடந்தன. அன்று காலை ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்கள் உபந்யாஸம் செய்தபொழுது ஆஜராயிருந்தவர்களிற் பலர் தேக பரவசமானாரென்றும், வெளியிந்திரியமாகிய செவிக்குமாத்திரம் உணவாயிருப்பதோடு நில்லாமல், பக்தி சிரத்தையுடைய பலரின் அந்தரங்க இயற்கையை உயர்த்திப் பாவனம் செய்ததாகச் சொல்லிக்கொண்டனர்.

பெங்களூரிலிருந்து வந்திருந்த ஓர் இளைஞர் அடையாற்றின் கடலில் சில நண்பர்களுடன் நீராடப்போய், அங்கு அலையின் வேகத்தால் இழுக்கப்பட்டுக் கடலில் மறைந்தனர். மறுதினம் சரீரம் அகப்பட்டு அதை எடுத்து வந்து ஸ்ரீமான் கிருஷ்ணாஜி மந்திரபூர்வமாய் தகனக் கிரியைகள் நடத்தின காக்ஷி வெகு உருக்கமாயிருந்தது. அந்த ஆன்மா யாதொரு மரணபாதையினின்றும் நீங்கி சாந்தியடையுமாறு ஸ்ரீ கிருஷ்ணாஜி முதலிய சில பெரியோர்கள் அந்த இடத்தில் பிரார்த்தனை புரிந்தனர்.

வந்திருந்த பிரதிநிதிகளுக்கு வேண்டிய எல்லாவித சௌகரியங்களுக்கும் தகுந்த ஏற்பாடுகள் வெகு நேர்மையாய் செய்யப்பட்டிருந்தன. அவைகளின் விமர்சைகளை இங்கு எடுத்தெழுத இடமில்லை. எது வேண்டுமானாலும் உடனே கவனிக்க ஏராளமான தொண்டர்கள் எல்லாவிடங்களிலும் காத்திருந்தனர். பிரதிநிதிகள் அஜாக்ரதையாய் இழந்த பல சாமான்களை ஓரிடத்தில் சேகரிக்கப்பட்டு சொந்தக்காரர்களுக்கு விசாரித்துக் கொடுக்கப்பட்டன. ஊருக்குப் பிரயாணம் போகவேண்டியவர்களுக்கு வேண்டிய வண்டி வசதிகளும் இன்னும் வேண்டிய சமாச்சாரங்



களும் அவர்களுக்கு உதவப்பட்டன. இந்தப் பெரிய பாரமார்த்திக இயக்கத்தில் ஒவ்வொரு சிறு லௌகீக அம்சமும் வெகு விதரணையுடன் கவனிக்கப்பட்டது, குறிப்பிடத் தகுந்தது. அங்கு நடந்த ஏற்பாடுகள் ஒவ்வொன்றும் வெளியுலகத்தாருக்கு மாதிரியாய் விளங்கிற்று. பிரதிநிதிகள் அனைவரும் சர்வ வல்லமையும் படைத்த மஹான்களின் கடாக்ஷம் பெற்று தங்கள் தங்கள் இருப்பிடத்திற்குச் சென்று முன்னிலு மதிகமான உத்ஸாகத்துடன் உலகிற் குழைக்கத் தயாரானார்களென்று சொல்லச் சிறிதும் சந்தேகமில்லை.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: ||

---

# புத்தக வரவு.

நமது பத்திரிகைக்கு பிரம்மஞான தமிழ் பிரசுர சங்கத்தாரிடமிருந்து அடியிற்கண்ட 3 அருமையான கிரந்தங்கள் அனுப்பப்பட்டன. அவையாவன:—

(1) குருவுபதேசம். (2) கல்வி கற்பித்தல் ஒரு கைங்கரியம் (3) நான் சென்றமார்க்கம். இம்மூன்றும் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்களால் லோகோபகாரமாக வெளியிடப்பட்டவைகள்.

இவைகளில், குருவுபதேசம் என்ற கிரந்தமானது வெளிப்பட்டது முதல், இதுகாறும் உலகின்கண்ணுள்ள எத்தனையோ பாஷைகளில் பல பதிப்புக்கள் வெளியேறி உலகெங்கும் நிரம்பியிருக்கின்றன. இந்நூலால் பயனடைந்தவர்கள் அனேகர். ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்களுக்கு அவரது குருநாதரால் தீக்ஷைக்குப் பக்குவப்படுத்த உபதேசித்தருளிய அரிய நூலாகும். இக்காலத்திற்கேற்ப எளிய நடையில் பால்ய சிஷ்யனுக்கு போதமாகும்படி உபதேசித்த

நூல். இதற்கிணையாக வேறு நூல் கிடைப்பது அரிது. சுருங்கச் சொல்லுமிடத்து, உண்மையான குருநாதரால் தீக்ஷைபெற்று மேல் மார்க்கத்தில் செல்ல விரும்புவோர்களுக்கு இவ்வொரு நூலையே கையில் சதாகாலம் வைத்துக் கொண்டு படித்து மனனஞ்செய்து அனுஷ்டிக்கின் போதுமானதாகும். இதன் விலை அணா—1.

கல்வி கற்பித்தல் ஒரு கைங்கரியமென்ற நூல் மிக்க அரிய நூல். இக்காலத்திய கல்விக் குழப்பத்தில் அமிழ்ந்து கிடக்கும் நமக்குப் பூர்வகாலம் குருகுல வாசத்தில் இருந்த கல்விக் கைங்கரியத்தின் பெருமை தெரியமாட்டாது. "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்றபடி, சரியான முறைமையில் பாலர்களுக்கும் பாலிகைகளுக்கும் கல்வி கற்பியாத தோஷத்தாலேயே இக்காலத்தில் நாமெல்லோரும் ஈனஸ்திதியை யடைந்து, பலவாறான கஷ்டங்களுக்கு உள்ளானோம். அதை உத்தேசித்தே ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியவர்கள், தனது குருநாதருடைய குறிப்பையறிந்து, மேற்கூறிய நூல் எழுதியிருக்கிறார். அந்நூலின் வழி உபாத்தியாயர்கள் நடக்கின் இஹபர சுகமுண்டு. இதனை உண்மை அனுபவத்தில் கண்டறிந்த விஷயமே. இதன் விலை அணா—6.

நான் சென்ற மார்க்கமென்ற நூல் ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தி யவர்களால் ஸ்வானுபவத்தில் கண்டுள்ள அனுபவங்களை மிக்க விமரிசையாகவும் அற்புதமாகவும் எடுத்து எழுதியுள்ளார். மேல் மார்க்கத்தில் செல்ல விரும்புவோர்களுக்கும் செல்பவர்களுக்கும் நேரக்கூடிய அனுபவங்களேயாயினும், முன் சென்றவர்களுடைய அனுபவத்தைப் பின் செல்பவர்களுக்கு எடுத்துக்காட்டும் விஷயத்தில் அவர்கள் தைரியமாயும் உறுதியாயும் மார்க்கத்தில் ஊன்றிநின்று, திகைக்காமலும் காலதாமதம் செய்யாமலும் மேல் செல்வதற்கனுகூலமாயிருக்கும் இவ்வரிய நூலும் ஆழ்ந்து படித்து மனனஞ்செய்து தெளியக்கூடியதாகும். இதன் விலை அணா—4.



**Advanced Text Book of Sanatana Dharma** (சநாதன தர்மம் மேற்பாட புத்தகம்.) இப்புஸ்தகம் காசி ஸென்டரல் இந்து காலேஜ் உயர்தர வகுப்பு மாணாக்கர்களுக்காக பூர்வம் தயார் செய்யப்பட்டது. அதை ஆங்கிலத்தினின்று மதுரை காலஞ்சென்ற பிர்ம்மஸ்ரீ ப. நாராயணய்யர் அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து புஸ்தகங்கள் அச்சிடுவித்து வெளிப்படுத்தினார்கள். அவைகளெல்லாம் செலவாகி விட்டபடியால் இரண்டாம் பதிப்பு பிரசுரித்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் ஆதியில் வெகு சிரமத்தோடு தயாரிக்கப்பட்டன. இதில் இந்து மதத்தின் சகல சாகைகளுக்கும் முரணில்லாதது. அபார சமுத்திரம் போலுள்ள இந்துமதக் கிரந்தங்களைப் படித்து விமர்சைசெய்து ஸாரத்தை கிரஹிக்கக்கூடிய அவகாச மில்லாதவர்களுக்கு இது கடைந்தெடுக்கப்பட்ட நவனீதம் போலாகும். சுருக்கிச் சொல்லுமிடத்து ஒரு முஸல்மான் சகோதரர் இதைப்படித்து பார்த்துவிட்டு தனக்கு இந்துமதத்தின் ஸாரத்தை இவ்விதம் எவரும் தனக்குச் சொல்லவில்லையென்றும் இப்புஸ்தகத்தில் இந்து பரிபாஷைக்குப் பதிலாக முஸ்லீம் பரிபாஷா வார்த்தைகள் உபயோகிக்கும் விஷயத்தில் தனது மதக்கிரந்தமாகவே சொல்லலாமென்றும் கருத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லையென்றும் தெரிவித்தார். இதன் விலை ரூ... 1–8-0

கிடைக்குமிடம்:— தமிழ் தியாஸாபிகல் பப்ளிகேஷன் ஸொஸைட்டி அடையார் மதராஸ். S-

1. லோககுரு வருகையின் விசேஷம் விலை ரூ 0–4–0
2. ஸ்ரீமான் ஜி. கிருஷ்ண மூர்த்தியின் முற்பிறப்புகள் 0-10-0
3. தாரகத்துதிகள் பல பக்தர்களால் பாடப்பட்டது 0–1–0

(1) இதில் லோக குருவகையின் விசேஷமென்ற கிரந்தம் அன்னை வசந்தையின் அற்புத முரசு. பரமரகசியமாய் வைத்திருந்த விஷயங்களைக் கால மாறுதலை உத்தேசித்து

பிராப்தம் உள்ளவர்கள் கேட்டறிந்து பரமனுக்குத்தொண்டு செய்து ஸத்கதி யடைய வேண்டுமென்ற காருண்ய நோக்கத்துடன் வெளிப்படுத்தியதாகும்.

(2) ஸ்ரீமான் ஜி. கிருஷ்ணமூர்த்தியின் முற்பிறப்புகள் என்ற கிரந்தம் புனர்ஜன்மம், கர்மம், கர்மமெப்படி பிரதிபலிக்கிறதென்ற விஷயங்களையும் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் ஏற்படும் சம்மந்தங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டும். இக்கிரந்தம் திவ்யதிருஷ்டியுள்ள இரண்டு ராஜ யோகிகளால் எழுதப் பட்டவை.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

தியாஸாபிகல் தமிழ் பப்ளிகேஷன் ஸொஸைடி

அடையார், சென்னை.

தமிழ் ... 210799 ...

# "தியஸாபிகல் ஸொஸைட்டி"

## என்னும்

# பிரம்மஞான ஸபை.

---

இஃது 1875-௵ நவம்பர் ௴ 17௳ அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் ஏற்பட்டு, சென்னை அடையாற்றில் இப்போது நிலைபெற்றிருக்கிறது. ஸமரச புத்தியோடு தத்துவ ஆராய்ச்சிக்கு ஒன்று சேருகிறவர்களின் சங்கம் இது. ஆதலால் இச்சங்கத்தார் நாஸ்திகத்தைக் கண்டித்து, ஆஸ்திக புத்தியை வளர்த்து, மனித வர்க்கத்திற்கு ஞானவழியில் உபகரிப்பவராவர். இதன் முக்கிய கொள்கைகள் மூன்று:—

(1) ஜாதி, மதம், வர்ணம், வகுப்பு, ஆண், பெண் இப் பேதங்களின்றி ஸர்வஜன ஸகோதரபாவம் நிலைபெறச் சாதகமாயிருத்தல்.

(2) வெவ்வேறான மதம், தத்துவசாஸ்திரம், பௌதிக சாஸ்திரங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சிசெய்வதை ஆதரித்தல்.

(3) மனிதனிடம் அடங்கியுள்ள சக்திகளையும் நமக்கு விவரந் தெரியவாராத பிரபஞ்ச நியதிகளையும் பரிசீலனஞ் செய்வது.

இச்சபையில் சேருகிறவர்கள் எம்மதத்தினராகவும் அல்லது ஒரு மதத்தையும் சேராதவராகவும் இருக்கலாம். ஆனால் மேற்கண்ட நோக்கங்களை ஒப்புக்கொள்ளவேண்டும். மதத் துவேஷங்களை ஒழித்து நல்லெண்ணமுள்ளவர்களாயிருந்துகொண்டு தங்கள் மத அபிப்பிராயங்கள் எப்படியிருப்பினும் மதவுண்மைகளைப் படித்து மற்றவர்களோடு தங்கள் படிப்பைக் கலந்துகொள்ள விரும்பும் படிப்பாளிகள் இச்சங்கத்தில் ஒருங்கு சேருகிறார்கள். அவர்கள் ஒற்றுமைக்கு ஒரே பொது நம்பிக்கை காரணமன்று. தத்துவத்தைக் கண்டறியும் ஒரே லக்ஷியத்தோடு அவர்கள் ஒருங்கே முயற்சிப்பதுதான் காரணம்.

ஓம் தத் ஸத்.

அப்பர் வருகின்றாரென் றறையப்பா முரசு.
அம்பலக் கோனண்டாரென் றறையப்பா முரசு.

# புதுயுகம்.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

**வருஷ சந்தா தபாற்கூலியுள்பட ரூ 1—8—0.**

ஸ்ரீலஸ்ரீ சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் "ஐயன்வருகுணமீது ஐயமில்லைகண்டீர்!" என்று தென்னாட்டில் முரசறைந்தும் அதைநாம் கேளாததால் உருமறைந்தார். அவர் சிஷ்யர் தொழுவூர் வேலாயுத முதலியார், தன்னிடம் பின்வருமாறு கூறியதாக 1882௵ தில் வெளியிட்டிருக்கிறார்:—

"இச்சமரஸவேத ஸந்மார்க்க ஸங்கத்தில் நீங்கள் சேர அருகரல்லர். இதன் உண்மையான அங்கத்தினர்கள் இந்தியாவுக்கும் வடக்கே வெகுதூரத்தில் வசித்து வருகிறார்கள். நான் சொல்வதைக் கேட்கிறீர்களில்லை. * * ருஷியா, அமெரிக்காவிலிருந்தும் அந்நிய நாடுகளிலிருந்தும் ஜனங்கள்வந்து இதேஸர்வஜீவ சோதரத்துவத்தை வற்புறுத்திச் சொல்லுங்காலம் சமீபித்துவிட்டது. * * வடக்கேயுள்ள அச்சோதரர்கள் சீக்கிரம் இந்தியாவில் அநேக அற்புதங்களைச் செய்வதைக் காண்பீர்கள். அவற்றால் நம் நாட்டிற்கு எண்ணிறந்த நன்மைகளுண்டாகும்."

இவ்விதம் இப்போது நிகழ்வதை இப்பத்திரிகை மூலமாக அறியலாம். மற்ற அரிய வியாசங்களும் உளது.

பத்திராதிபர்—ஸ்ரீமான் இராவ்சாகிபு, சு. வி. கனகசபை பிள்ளை,
அசிஸ்டெண்ட் இஞ்சினியர், P. W. B.
"மோரியாசிரமம்" மேட்டூர்
பவானி, மார்க்கம்,
கோயமுத்தூர் ஜில்லா.